Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசீய தினசரி National Tamil Daily

மலர் 7 (28-8-65) இதழ் 197

விசுவாவசு ஆவணி 12 ரபி: ஆகிர் பிறை 30 சனிக்கிழமை

# உள்ளூர் வெங்காய உற்பத்தி பாதிப்பு

## பெருமளவு பம்பாய்வெங்காய இறக்குமதிகாரணம்

### மந்திரிக்கு முறையீடு

யாழ்ப்பாணம், சனி

வெளிநாடுகளிலிருந்து பம்பாய்வெங்காயம் பத்தாயிரம் அந்தர் வரை இலங்கையில் தற்போது இறக்குமதியாகியுள்ளதால் ருத்தல் 15 சத வீதம் கொழும்பில் கவிற்பனையாகிறதென்றும் இதனுல் வடபகுதியில் உற்பத்தியாகும் வெண்காயம் தற்போது விற்பனைசெய்யப்படும் விலையான 23 சதத்திற்கு தென்னிலங்கையில் விற்பனை செய்வது சாத்தியமாக இராது என்றும் இது வடபகுதி வெண்காய உற்பத்தியாளர்களைப் பெரிதும் பாதிக்குமென்றும் வடபகுதிவெண்காய உற்பத்தியில் முன்னிற்கும் அளவெட்டி கிராமத்தைச்சேர்ந்த அளவெட்டி பலநோக்குக் கூட்டுறவுச்சங்க வர்த்தகஅமைச்சருக்கு தந்தி மூலம் தெரிவித்துள்ளது.

பம்பாய்வெண்காயஇறக்குமதிக்கு முன்னர் நாளொன்றுக்கு 100 அந்தர் கொண்ட 20, 22 பெட்டிகள் வட பகுதியிலிருந்து தென்இலங்கைக்கு அனுப்பப்பட்டதாகவும் தற்போது இது பாதியாகக் குறைக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இவ்விதநிலையில் இப்பகுதியில் பெய்துள்ள மழை நிலைமையை மேலும் மோசமாக்கியுள்ளதாகத் தெரிகிறது. இந்த மழை காரணமாக பிடிகட்டவேண்டிய காய், சொரிகாயாக அறுத்துக் குவிக்கவேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளது. வழமையான கோட்டாக்கள் இருந்திருப்பின் இவ்விதம் உற்பத்தியாளர்கள் பெரும் நஷ்டம் அடைவது தவிர்த்திருக்கலாமென்று வடபகுதி விளைபொருள் உற்பத்தியாளர் விற்பனவு சமாஜமும் கூட்டுறவு சங்கங்களும் வர்த்தக அமைச்சருக்கும் வடபகுதி எம்.பி.க்களுக்கும் சுட்டிக்காட்டி மகஜர்களை அனுப்பவிருக்கின்றன.

## வவனியாவில் 12,000 பேர்களுக்கு நிவாரண வேலை

### சமூகசேவைப் பகுதியினரின் தாராளம்

வவனியா, வெள்ளி

வவனியாவில் கடந்த சூறாவளியினுல் பாதிக்கப்பட்ட சுமார் 12 ஆயிரம் பேருக்கு வவனியா சமூக சேவைப் பகுதியினர் நிவாரண வேலை கொடுத்து அவர்களின் கஷ்டத்தை நீக்கி வருகிறுர்கள்.

வவனியா மாவட்டத்தில் 187 வேலை முகாம்கள் அமைக்கப்பட்டு அதன் மூலம் வேலையற்றிருக்கும் குடும்பங்கட்கு வேலைவசதி அளிக்கப்பட்டு வருகிறது.

சகல வேலை முகாங்களையும் வவனியா சமூக சேவை உத்தியோகத்தர் திரு வி. ஜயரத்தினமும், காரியாலய உதவியாளரும் கவனித்து ஆவன செய்து வருகின்றனர்.

வவனியாவுக்கு பரிபாலன உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்கும்படி பலமுறை கோரப்பட்டிருந்தும் சமூக சேவைக் காரியாலயத்துக்கு விண்ணப்பித்தும் இதுவரை நியமிக்கப்படவில்லை யென அறியப்படுகிறது.

இப்பொழுது வவனியாக் கச்சேரியில் அரசாங்க அதிபர் இல்லாத காரணத்தினுல் சமூக சேவை உத்தியோகத்தரும், காரியாலய உதவியாளரும் தமது தீவிர முயற்சியினுல் கூடுதலான நிவாரண முகாம்கள் அமைத்து அதன் மூலம் அவதியுறும் மக்களுக்கு வேலை வசதி அளித்து வருகிறுர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புதிய அரசாங்க ஊழியர் நிலை: உச்சிமாநாடு விரைவில் நடைபெறும்

புத்தளம், வெள்ளி

1956-ம் ஆண்டின் பின்பு சேர்ந்த புதிய அரசாங்க ஊழியர்களினது சம்பள உயர்வு, நியமன உறுதிப்பாடு ஆகியவை சம்பந்தமாக பிரதமர் டட்லி சேனநாயக்காவும், தமிழ்ரசுக்கட்கித் தலைவர் செல்வநாயகம், தமிழரசுக்கட்சிப் பொதுச்செயலாளர் திரு. அமிர்தலிங்கம், ஆகியோர் இவ்வாரமுடிவில் பேச்சுவார்த்தை நடத்துவர் என தெரிகிறது.

தேசீய அரசாங்கம் அமைப்பதற்கு முன்பு, திரு. டட்லி சேனநாயக்காவுக்கும், திரு எஸ். ஜே. வி. செல்வநாயகத்திற்குமிடையில் செய்யப்பட்ட ஒப்பந்தத்தின் படி புதிய அரசாங்க ஊழியர்கள் அவர்கள் சேவையில் உறுதிப்படுத்தப்பட்டு, சம்பள உயர்வும் கொடுக்கப்பட வேண்டுமென்றும், தமிழரசுக்கட்சி வற்புறுத்தும் எனவும் தெரிகிறது. இது சம்பந்தமாக மந்திரிசபை உபகுழு செய்த சிபார்சுகளை அப்படியே ஏற்றுக் கொள்ளும்படி மந்திரி சபையை வற்புறுத்த வேண்டும் என பிரதமரிடம் திரு செல்வநாயகம் வற்புறுத்துவார் எனத் தெரிகிறது.

### ஜி. ஸி. ஈ. விண்ணப்ப முடிவு திகதி ஒத்திவைப்பு

பம்பலப்பிட்டி, வெள்ளி

தனிப்பட்ட பரீட்சார்த்திகள் ஜி. ஸி. ஈ. (சாதாரண)ப் பரீட்சைக்கானவிண்ணப்பங்கள் அனுப்புவதற்கான இறுதித்திகதி செப்டம்பர் 15 வரை ஒத்திப் போடப்பட்டுள்ளது.

முன்னர் விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய திகதி ஆகஸ்ட் 31 என அறிவிக்கப்பட்டிருந்தது.

கடந்த சிலநாட்களில்விண்ணப்பப்பத்திரங்களுக்கு பலர் மனுச்செய்திருந்ததன் காரணமாகவே இவ்வித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

வவனியா, வெள்ளி

வவனியாவில் உற்பத்தியாக்கிய பம்பாய் வெண்காயம் சகலதும் அரசாங்க உத்தரவாத விலைக்கு எடுப்பதை முன்னிட்டு வவனியா பூந்தோட்டத்தில் அடுத்த மாதம் முதல் திகதியில் பம்பாய் வெண்காய அறுவடை விழாவை வவனியா விவசாய இலாகா நடத்தவிருக்கிறது.

### மந்திரி பிலிப் வட்டுக்கோட்டைக்கு விஜயம்

புத்தளம், வெள்ளி

கைத்தொழில் மீன்பிடி அமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தன, வட்டுக்கோட்டைத் தொகுதிப் பிரதிநிதி திரு. அ. அமிர்தலிங்கத்தின் அழைப்பைஏற்று வட்டுக்கோட்டைத் தொகுதிக்கு விஜயம்செய்ய இருக்கிறுர்.

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினுல் நடத்தப்படும் அராலி உப்பளத்திட்ட விஸ்தரிப்பு சம்பந்தமாகவும், பொன்னுலை சிறுகடல், அராலி, மாதகல் கடலோரங்களில் மீன் பண்ணைகள் அமைத்தல் ஆகிய இரு திட்டங்களையும் அமைச்சரிடம் சமர்ப்பித்த வட்டுக்கோட்டைப் பிரதிநிதி இத்திட்டங்களை அமைச்சரே நேரில் பார்வையிட்டுப் பரிசீலனை செய்யவேண்டுமென்றுகேட்டுக் கொண்டதற்கிணங்க, அமைச்சர், விரைவில் தான் வருவதற்கான திகதியைத் தெரிவிப்பதாகத் தெரிவித்துள்ளனர் என அறியப்படுகிறது.

மீன் பண்ணைகள் அமைக்கும் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டால், வட்டுக்கோட்டைத் தொகுதியின் வேலையில்லாத் திண்டாட்டம், பெருமளவுக்கு குறையுமென்றும், இலங்கையின் தேவைக்கேற்ற மீன்களைப் பெருமளவுக்கு இப்பண்ணைகள் விநியோகிக்க முடியுமென்றும், திரு. அமிர்தலிங்கம் அமைச்சருக்குச் சுட்டிக்காட்டியுள்ளதாகத் தெரிகிறது.

### திருக்கேதீஸ்வரத்தில் பிள்ளையார் கோயில்

#### இ. போ. ச. ஊழியரின் முயற்சி

யாழ்ப்பாணம், சனி

புதிதாக அமைக்கப்பட்டுள்ள வடபகுதி இ. போ. ச. இந்து ஊழியர் சங்க அங்கத்தவர்கள் இன்று திருக்கேதீஸ்வரத்துக்கு விசேஷ பஸ்மூலம் செல்லவிருக்கிறுர்கள். திருக்கேதீஸ்வரத்திலுள்ள பாலாவியில் ஒரு பிள்ளையார் கோயிலை கட்டுவதற்காக இச்சங்கம் தாம் சேர்ந்த தொகையான 2,600 ரூபாவை அங்குவழங்கும். ஸ்ரீ கந்தையா வைத்தியநாதன் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளதாக அறியப்படுகிறது.

## 'முதல் வெடி தீர்ந்ததும் கையில் காயம் ஏற்பட்டது'

### நெடுந்தீவு கொலைமுயற்சிவழக்கில் காயமடைந்தவர் சாட்சியம்

யாழ்ப்பாணம், சனி

நெடுந்தீவு கொலை முயற்சி வழக்கு நேற்றுக்காலை வடபகுதி அஸைஸ் கோர்ட்டில் நீதியரசர் டாக்டர் எச். டபிள்யூ. தம்பையா கியூ. ஸி, முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் 1963-ம் ஆண்டு ஜூலை மாதம் 18-ம் திகதி நெடுந்தீவில் ஐயம்பிள்ளை கந்தையா, நாகம்மா பொன்னம்மா, சொக்கலிங்கம் சுப்பிரமணியம்ஆகியோரை அதே இடத்தில் அதே நேரத்தில் துப்பாக்கியினுல் சுட்டுகொலைசெய்ய முயற்சித்ததாகசெபமாலைசேவியர், ராமநாதர் தியாகராசா ஆகியோர் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன், திரு. ஆர். கோபாலரத்தினத்தின் உதவியுடனும், திருவாளர்கள் ஆர். விஸ்வநாதன், எஸ். பாலகுமார் ஆகியோரின் அனுசரணையுடனும் ஆஜரானுர்.

காயமடைந்தவர்களில் ஒருவரான ஐயம்பிள்ளை கந்தையா சாட்சியமளித்த போது, தான் டோர்ச்லைட் அடித்த போது எதிரிகள் முன்னுல் நிற்பதைக் கண்டதாகவும், முதல் வெடிதீர்ந்ததும் தனது கையில் காயமேற்பட்டதாகவும், தற்பொழுது கை வழங்கமுடியாமல் இருப்பதாகவும், விரல்களை விரிக்கமுடியாமலிருப்பதாகவும் அதே இடத்தில் தனக்கு மயக்கம் வந்ததாகவும், மீண்டும் ஆஸ்பத்திரியில் அறிவுவந்ததாகவும் கூறினுர்.

எதிரிகள் தங்களுக்குள் உதவினரென்றும், ஆஸ்பத்திரியில் கிராமசேவகருக்கு தான் வாக்குமூலமளித்ததாகவும் அவர் மேலும் கூறினுர்.

அடுத்த மாதம் முதலாம் திகதி விசாரணை ஒத்திப் போடப்பட்டுள்ளது.

## தமிழரசுக் கட்சி சார்பில் செனட் ஸ்தானம்

### திரு. நடராசாவுக்கு கிடைக்கலாம்?

திருக்கோணமலை, வெள்ளி

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் அடுத்த செனட்டராகத் தெரிவு செய்யப்படும் வாய்ப்பு மல்லாகத்தைச் சேர்ந்த தமிழரசுக்கட்சியின் ஆரம்ப கால உறுப்பினர்களில் முக்கியமானவரான வழக்கறிஞர் திரு. எஸ். நடராசாவுக்குக் கிடைப்பது நிச்சயமெனத் தெரியவருகிறது.

பிரதேசவாரியாக செனட்டர்களைத் தெரிவுசெய்யப்படவேண்டுமென்ற பிரச்னைகளுக்கு முடிவுகட்டுமுகமாக கட்சியின் நீண்டகால உறுப்பினர்களில் சிரேஷ்ட தரத்திற்கிணங்கவே செனட்டர்களைத் தெரிவுசெய்யவேண்மென்று தமிழரசுக் கட்சித் தலைமைப்பீடத்தில் ஒருசாரார்அபிப் பிராயப்படுகின்றனராம். இதற்கிணங்கவே மல்லாகம் புரக்டர் திரு. நடராசாவுக்கு நிச்சயம் செனட்டர் பதவி கிடைக்கலாம் எனக் கட்சிப் பிரமுகர்கள் தெரிவிக்கின்றனர்.

### மாத்தளை மகாநாடு

ஜனநாயகசதுக்கம், (மாத்தளை) சனி

நேற்றுக்காலை மாத்தளை முற்றவெளித்திடலில் ஆரம்பமான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் 21-வது வருடாந்த மகாநாட்டில் பல தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் வெளியூர்ப் பிரதிநிதிகளும், மந்திரிகள் எம். பி.க்கள் மற்றும் பிரமுகர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முற்றவெளித்திடலில் அமைக்கப்பட்டிருந்த அழகான பந்தலில் மக்கள்

(6-ம் பக்கம் பார்க்க)

உங்கள் கட்டிடங்கள்
உறுதியாக இருப்பதற்கு
திறமான
★ இரும்புச்சாமான்களும்
★ பெயிண்டு வகைகளும்
அஸ்பஸ் சீட்டுகளும்
மர வகைகளும்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
விஷ்ணு
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
வல்வெட்டித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

காலையில் விழித்தெழுந்ததும், இரவில். படுக்கப் போகும்போதும் கடவுளைத் தியானியுங்கள். அவரிடம் பூரண சரணாகதி அடைவதே ஆத்மீக சாதனைகளின் சாராம்சம். இது மோட்சத்துக்கு இட்டுச் செல்லும். — சுவாமி சிவானந்தர்


# ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு ஆவணிமீ 12 உ (28-8-65)


## இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்

மாத்தளையிலே ஆரம்பமான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மகாநாட்டுக்கு முதல்முறையாக பிரதமர் டட்லி சேனநாயக்காவும் விஜயம் செய்து பேசுவது பெரிதும் வரவேற்கத்தக்கதுடன், இலங்கை இந்தியர் பிரச்னையைச் சுமுகமாகத் தீர்க்கவும் இது நல்ல சூழ்நிலையை ஏற்படுத்துவதாகும்.

1939-ம் வருடத்திலே பண்டித ஜவஹர்லால் நேருவால் ஆரம்பிக்கப்பட்ட இலங்கை இந்தியர் காங்கிரஸ், நாடு விடுதலையடைந்த பின் இலங்கை தொழிலாளர் காங்கிரஸாகவும்இலங்கை ஜனநாயக காங்கிரஸாகவும் மாறி பல மகாநாடுகளை நடத்தியுள்ளன. இம் மகாநாடுகளுக்கு இலங்கையின் பிரதமமந்திரிகள் யாரும் இதுவரை வந்து பேசியதில்லை. சில மந்திரிகள் மட்டும் வந்திருக்கிறார்கள். இம்முறை தேசிய அரசாங்கத்தின் பிரதமமந்திரி இம்மகாநாட்டுக்கு வருவதால் இதன் முக்கியம் பெரிதும் அதிகரித்துள்ளது.

இலங்கை இந்தியர் பிரச்னையைத் தீர்க்க வேண்டிய சமயம் வந்துவிட்டது. ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்தத்தை அடிப்படையாகக் கொண்டு இதைத் தீர்ப்பதுபற்றி இரு அரசாங்கங்களுக்கும் பேச்சுகள் நடக்கின்றன. இலங்கையிலிருந்து கூடுமானவரை அதிகமான இந்திய வம்சாவளியினரை இலங்கையிலிருந்து வெளியேற்றிவிட வேண்டுமென்பதேஒப்பந்தத்தின்அடிப்படை நோக்கம். அம்மக்களில் பெரும்பாலோரும் இலங்கையில் பிறந்தவர்கள். இந்நாட்டின் பொருளாதாரத்துக்கு முதுகெலும்பு போல் இருந்து தேயிலை முதலிய தோட்டங்களில் உழைத்து வருகிறார்கள். அவ்வித அரிய உழைப்புச் செல்வம் நாட்டுக்கு எவ்வளவு உயிர்போன்றதென்பதை உணர்ந்திருப்பின் அவர்களை நாடுகடத்துவதற்குப்பதில், காடுகளை அழித்து உணவு உற்பத்தியைப் பெருக்கும் முக்கிய பணியில் ஈடுபடுத்தி இருக்கலாம். அப்படிச் செய்திருந்தால் இன்று நாம் பிறநாடுகளுக்கு அன்னக்காவடி தூக்க வேண்டாததுடன், நமது செலாவணியும் மிகவும் மிச்சப்பட்டிருக்கும்.

ஆனால் துரதிருஷ்டவசமாக இதுவரை இலங்கை அரசாங்கம், வகுப்புவாத கண்ணாடி போட்டுக்கொண்டு துவேஷமனப்பான்மையுடனேயே இம்மக்களைகப் பார்த்துவந்தது. இவர்களைதமிழரென்றும், இந்தியரென்றும் மதித்ததே ஒழிய, அவர்கள் உழைக்கும் தொழிலாளரென்பதையும் நாட்டுக்கு அவர்கள் அஸ்திவாரம் போன்றவர்கள் என்பதையும் உணராமல் இருந்தனர். இதனால் சம்பந்தப்பட்ட அம்மக்கள் பட்டுள்ள, பட்டுவரும் சிறுமைகளுக்கும், கஷ்டங்களுக்கும் கணக்கில்லை. இதை மனிதப் பிரச்னையாகவே மதித்து அவ்விதமே தீர்க்கவேண்டுமென்று அஸ்கிரிய பௌத்த குருபீட அதிபர் சமீபத்தில் சரியாகச் சொன்னார். மனிதஉரிமை சாஸனப்படியும், சர்வதேசத் தொழிலாளர் சாஸனப்படியும் இப்பிரச்னையை மனிதாபிமானத்துடன்தான் தீர்க்கமுடியும். கட்டாய வெளியேற்றங்கள் பிரச்னையை அதிக சிக்கலாக்குவதுடன், இலங்கைக்கும் அது தீமையாகும்.

இப்போது தேசீய அரசாங்கம் இந்தப் பிரச்னையைப் புதிய மனப்பான்மையுடன் கவனிக்க வேண்டிய அவசியமும் சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஒத்துழைப்பை, தேசீய அரசாங்கம் பெற்றுள்ளதால் அந்த ஸ்தாபனத்தாருடன் பிரதமர் இப்பிரச்னையைப்பற்றி அடியோடு கலந்துபேசி, மனிதாபிமானத்துடன் இதைத் தீர்க்கவும் அவர்களது பூரண ஒத்துழைப்பைப் பெறவும் இது நல்லதோர் தருணமாகும். இது தொழிலாளரைப் பற்றிய பிரச்னையாதலால், எதிர்க்கட்சியில் உள்ள இடதுசாரிகளின் ஒத்துழைப்பும் கிடைக்க வேண்டுமென்று எதிர்பார்ப்பது மிகையல்ல. இந்த முக்கியமான தேசீயப்பிரச்னையை மனிதாபிமானத்துடனும், தீர்க்கதரிசனத்துடனும் தீர்க்க மாத்தளையில் நடைபெறும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பெரிதும் வழிசெய்யுமென்றே நம்புவோம்.

# நாடற்றோர் பிரச்னை இன்று முக்கியகட்டத்தை அடைந்துள்ளது

## மாத்தளை இ. தொ. கா. மகாநாட்டின் ஆண்டறிக்கை விபரம்

மாத்தளை, வெள்ளி

''இந்த ஆண்டில் இலங்கைவாழ் இந்திய வம்சாவளியினரான நாடற்றவர்களின் பிரச்னை ஒரு முக்கிய கட்டத்தை அடைந்துள்ளது. பேச்சுவார்த்தைகளிலும், விதண்டா வாதங்களிலும் நீண்டுகொண்டிருந்த இருபத்தைந்தாண்டுச் சரித்திரத்துக்குப்பின் இன்று இங்கு நிரந்தரமாக வாழும் இந்த மக்களில் எத்தனை பேரை இந்த நாடு ஏற்றுக்கொள்ள முடியுமென்று ஆராயும் நிலைக்கு இந்நாடு வந்துள்ளது. இம் மக்களில் பெரும் பான்மையோர் தோட்டத் தொழிலாளர்களே'' இவ்வாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் செயலாளர் திரு எம். எஸ். செல்லச்சாமி தனது ஆண்டறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவர் தமது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இந்த மொழிலாளர்கள் சில உத்தரவாதங்களின் பேரில் தென்னிந்தியாவிலிருந்து தோட்டங்களில் தொழில் புரிவதற்காக கொண்டுவரப் பட்டார்கள்.

1948-ல் ஆங்கில ஆட்சி முடிவுற்ற வரையில் இந்நாட்டில் வாழ்ந்த மற்ற மக்களைப் போலவே அவர்களும் பிரிட்டிஷ் பிரஜைகள் என்ற அந்தஸ்த்தை அனுபவித்து வந்தனர். இந்நாடு சுதந்திரம் அடைந்தபின் உண்டாக்கப்பட்ட பிரஜாவுரிமைச் சட்டத்தின் பயனாக அம்மக்களில் பத்துலட்சம் பேர் இதற்குமுன் அனுபவித்துவந்த குடி உரிமையையும், அரசியல் உரிமையையும் இழந்து ''நாடற்ற'' வர்களாக்கப்பட்டார்கள். இந்த பிரச்னை தீர்க்கப்படாமலேயே நீண்டுவளர்ந்து கொண்டிருந்ததனால் இந்நாடற்றவர்கள் அடைந்த துன்பங்களும் துயரங்களும் எண்ணிலடங்கா.

1964 அக்டோபரில் இந்தப் பிரச்னைக்கு ஒரு இறுதித் தீர்வு காணும் முகமாக திருமதி ஸ்ரீமாவோ அரசாங்கம் இந்திய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை தொடங்கியது.

அப்பேச்சுவார்த்தைகளுக்காக இலங்கைக் கோஷ்டி டில்லிக்குப் போகுமுன் பிரதம மந்திரி இங்குள்ள எல்லா அரசியற் கட்சித் தலைவர்களோடும் அப்பிரச்னைபற்றிக் கலந்து பேசினார். ஆனால் இப்பிரச்னையில் சம்பந்தப்பட்ட மக்களின் பிரதிநிதிகளோடு அவர் யாதொரு தொடர்பும் கொள்ளவில்லை. டில்லியில் பேச்சுவார்த்தைகள் நடக்கும்போது தன்னுடைய பிரதிநிதிகளையும் அங்கு அனுப்புவதற்குப் போக்குவரத்துவசதி செய்து கொடுக்குமாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சமர்ப்பித்த வேண்டுகோளை பிரதம மந்திரி நிராகரித்து விட்டார்.

சிறுபான்மைச் சமூகத்தைச்சேர்ந்த பாராளுமன்ற அங்கத்தினர்கள் அதுபற்றி ஒரு மகாநாடு கூடிப் பேசி பத்திரிகைகளுக்கு ஒரு அறிக்கை வெளியிட்டனர். அதன் நகல் இலங்கை இந்தியப் பிரதம மந்திரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இந்த வேண்டுகோளை பிரதமர் நிராகரித்தார். தன் அரசாங்கத்திலிருந்த இடதுசாரித் தலைவர்களையும் இப்பேச்சிலிருந்து முன்னெச்சரிக்கையாக ஒதுக்கிவிட்டார். இந்தத் தலைவர்கள் சென்ற முப்பது வருடங்களாகத் தோட்டப் பாட்டாளிகளின் நாட்டுரிமை, ஓட்டுரிமைகளுக்காகப் பெருங்குரலில் பேசிக் கிளர்ச்சி செய்தவர்களாவர். அதே பாட்டாளிகளின் தலைவிதியை நிர்ணயிக்கப் போகும் பேச்சுவார்த்தைகள் நடக்கும் இச்சமயத்தில் அதே அரசாங்கத்தில் தாங்களும் ஒரு கூட்டுப் பங்காளராக இருந்தும், அவர்களின் அந்தப் பேச்சுவார்த்தைகளிலிருந்து ஒதுங்கி ஊமைகளாக இருந்தது மட்டுமல்ல, அந்தப் பேச்சுவார்த்தை சம்பந்தப்பட்ட மக்களின் பிரதிநிதிகளோ அல்லது தாங்களோ கலந்துகொள்ளவேண்டுமென்று கூறக் கூட முன்வரவில்லை.

இதுவரை தங்கள் ''தோழர்'' களாக நடித்து வந்த இடதுசாரித் தலைவர்கள் காட்டிச் கொடுத்த கயவாளித்தனத்தைக் கண்டு வேதனையும் வெறுப்பும் கொண்டனர் மலையகத்துப் பாட்டாளிகள்.

1964-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 24-ம் திகதியில் இருந்து 30-ம் திகதி வரை புதுடில்லியில் பிரதம மந்திரிகள் இருவரும் நடத்திய பேச்சுவார்த்தையால் ஓர் ஒப்பந்தம் உருவாயிற்று.

இந்த ஒப்பந்தத்தைப் பற்றி 1964 நவம்பர் 10-ம் திகதி பிரதமமந்திரி செனட் சபையில் பேசும்பொழுது தன்னுடைய சொந்த வியாக்கியானத்தையே அடிப்படையாக வைத்து கட்டாய நாடு கடத்தல் உண்டென்றும் பதிவுப் பிரஜைகளுக்கு தனிவாக்காளர்பட்டியல் தயாரிக்கப் படுமென்றும் வேலைவாய்ப்பைக் கட்டுப்படுத்தும் சட்டங்கள் கொண்டுவரப்படுமென்றும் அறிக்கைவிட்டார். இம் மூன்று அம்சங்களாலும் இந்த ஒப்பந்தத்தின் உண்மையான நோக்கமே உருக்குலைந்துவிட்டது.

ஐக்கியதேசியக்கட்சி நாட்டின் சிறுபான்மை குழு ஆதரவோடு 1965 மார்ச் 25-ம் திகதி தேசிய அரசாங்கத்தை அமைத்தது.

இந்திய வம்சாவளி மக்களின் நலனைப் பிரதிபலிக்க பாராளுமன்றத்திற்கு நமது தலைவர் திரு. எஸ். தொண்டமான், நிதிக்காரியதரிசி திரு. அண்ணாமலை ஆகியவர்கள் நியமனம்பெற்றனர்.

# ஐயாறன் எழுதுவது

திருஞானசம்பந்த சுவாமிகள் ஈழநாட்டுக்கு வந்தாரா? வந்துதான் திருக்கேதீச்சரம், திருக்கோணமலை திருப்பதிகங்களைப் பாடினாரா அல்லது இந்தியாக் கரையிலிருந்தே பாடினாரா? சென்னையிலிருந்து யாழ்ப்பாணம் வந்திருந்த அறிஞர் ஞானசம்பந்தன் அவர்களை இதுபற்றி கேட்டதற்கு, ஈழம் வந்து இருஸ்தலங்களையும் நேரில் தரிசித்தே அவர் இப்பதிகங்களைப் பாடியுள்ளதாயும், அப்பாடல்களிலுள்ள பல விவரங்களும் இதை நிரூபிப்பதனையும், தமது தந்தையாரும் இவ்விதமே கருத்துத் தெரிவித்ததாயும் சொன்னார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருக்கேதீச்சரம்பற்றி மட்டும் பாடிவிட்டு, கோணேச்சரத்தைப்பற்றி ஏன் பதிகம் பாடவில்லை என்று கேட்டதற்கு, அவர் பாடியிருப்பாரென்றும் ஏராளமான தேவாரப் பதிகங்கள் செல்லரித்துவிட்டதென்பதை மறக்கப்படாதென்றும் தெரிவித்தார்.

நல்லவேளை சில திருமுறைகளாவது தப்பின. அவை தானே தமிழுக்கும், சைவத்துக்கும் இங்கு உயிர் ஊட்டி வருகின்றன! அவைமட்டும் இல்லாவிட்டால்......

ஃ ஃ ஃ

இரு நாட்டு பிரயாணத் தடைகளுக்கும் தப்பி ஞானசம்பந்தன் அவர்கள் இங்கு வந்து பேச முடிந்தது மகிழ்ச்சியும் வியப்புமளித்தது. கொழும்பிலே அவர் மூன்று அருமையான பிரசங்கங்கள் செய்ததாயும் ஏராளமான மக்கள் கூடி பெரிதும் இன்புற்றதாயும் கொழும்பு அன்பர் எழுதியிருந்தார். இங்கு நாவலர் மண்டபத்தில் அவர் பேசிய பேச்சைக் கேட்டேன்.

ஒன்றரை மணி நேரம் போனதே தெரியவில்லை. எவ்வளவு நகைச்சுவை! எவ்வளவு புதுப் புதுக் கருத்துகள்! கூட்டத்தினர் மெய் மறந்து கேட்டார்கள். இன்னும் ஒரு மணி நேரத்துக்கு மேல் அவர் முருகன் பெருமையைப்பற்றிப் பொழிந்திருப்பார். ஆனால் நல்லூர் சப்பரத் திருவிழாவை முன்னிட்டு அவர் சீக்கிரம் முடிக்க வேண்டியதாயிற்று.

வவுனியா நகர மண்டபத்திலே சைவத் தொண்டர் சபையின் ஆதரவில் அவர் செய்த பிரசங்கத்துக்கு ஏராளமான கூட்டமாம். வவுனியாவிலேயே சைவ சமூகத்துக்குப் புத்துயிர் ஏற்பட்டுள்ளதென்றார் நண்பர். அங்கிருந்து திருக்கேதீச்சரம் சென்று தரிசித்துவிட்டு, கொழும்பு சென்று 30ந் திகதி அறிஞர் சென்னை திரும்புகிறாராம்.

ஃ ஃ ஃ

இந்தியா - இலங்கைக் கதவுக்கு இருபுறமும் தாள் போட்டுள்ளனரல்லவா? அதை அகற்றிவிட்டனரா? எப்படி இங்கு வரமுடிந்தது என்று அவரைக் கேட்டேன். அழைப்பின்மீது இங்கு வரும் பேச்சாளரும் கூட நாளொன்றுக்கு 10 ரூபாய் வீதம் செலாவணி கூட்டவேண்டுமென்று, சென்ற டயஸ் தர்பாரில் ஒரு காட்டுமிராண்டி உத்தரவு போட்டனரல்லவா? அதை இன்னும் நீக்கவில்லையாம். அதனால் மலாயாவிலிருந்து கிடைத்த செலாவணியைக் காட்டியே தாம் வர முடிந்ததென்றும் அது இல்லாவிட்டால் தாம் வர முடிந்திராதென்றும் சொன்னார்!

(2-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்சி)

விஸா வரி, செலாவணி வரி முதலியவற்றை நீக்கிய தேசீய அரசாங்கம், மேற்குறித்த அநாகரிகமான உத்தரவையும் உடன் ஒழிக்க வேண்டும். நாம் இங்கு அழைக்கும் பெரியார்களுக்கும், கலைஞர்களுக்கும் நாம் உண்ண உணவும் இருக்க இடமும் அளிப்பது நமது விருந்தோம்பல் கடமையல்லவா? ஒவ்வொரு நாளுக்கும் பத்து ரூபாய் வீதம் கொண்டுவா என்று விருந்தினரை நாம் நிபந்தனை கேட்கும் விபரீதம் உலகிலே இலங்கையைத்தவிர வேறு எங்கும் இருக்குமென்று தெரியவில்லை.

கூடாத இந்த நிபந்தனைத் தடையையும் அகற்றிவிட உடன் நமது எம். பி. க்கள் தக்க முயற்சி எடுக்கவேண்டும். விருந்தாளிகளாக சில நாட்கள் இங்குவரும் அறிஞர்களையும் கலைஞர்களையும், சாப்பாட்டுக்குப் பணம் கொண்டுவா என்று கேட்பது பெரிய வெட்கக்கேடு. நிலைமையை விளக்கினால், இந்த அக்கிரம நிபந்தனையையும் அரசாங்கம் நீக்கிவிடுமென்றே நம்புகிறோம். கேட்டால் கொடுக்கப்படும். தட்டினால் திறக்கப்படும்.

ஃ ஃ ஃ

அவர் இப்போது சென்னை அரசாங்கத்திலே தமிழ் அபிவிருத்தி ஆராய்ச்சிசபை, தமிழ் வெளியீட்டுசபை இவற்றின் அதிகாரியாக இருந்துவருகிறார். கல்லூரிகளிலே தமிழ்மூலம் கல்வி போதிக்க இதுவரை 118 தமிழ்மொழிபெயர்ப்பு நூல்களை வெளியிட்டுள்ளாராம்.

கல்லூரிகளில் தமிழ்மூலம் போதனை செய்வதைப்பற்றி கேட்டதற்கு, இது அவ்வளவாக வெற்றி பெறவில்லை என்றும், தமிழ் மூலம் படிப்பின், தங்கள் எதிர்கால வளர்ச்சிக்குத் தடை ஏற்படுமோ என்று மாணவர்கள் சந்தேகப்படுவதாயும் தெரிவித்தார்.

படிக்க இலங்கையிலிருந்து செல்லும் நம் வாலிபர்களுக்கு அவர் கூடுமான உதவிகளைச் செய்வதைக் கேட்க மிக மகிழ்ச்சியாக இருந்தது. அவர் நீடூழி வாழ்க!

ஃ ஃ ஃ

சலமிலன் சங்கரன்
சார்ந்தவர்க்கல்லால்,
நலமிலன் நாடொறும்
நல்குவான்
நலன், குலமிலராயினும்
குலத்திற் கேற்பதோர்,
நலமிகக் கொடுப்பது
நமச்சிவாயவே
— அப்பர் சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஷ்மீர் பற்றி ஐ. நா. வில் பெரும் சிரத்தை

# யுதாண்ட் - ஜெனரல் நிம்மோ சந்திப்பு

## எல்லைக் கோடு தாண்டப்பட்டதற்கு பாராட்டு

## யுதாண்டுடன் ஒத்துழைக்குமாறு இரு நாடுகளுக்கும் பிரிட்டன் வேண்டுகோள்

நியூயோர்க், ஆக. 27

ஸ்ரீநகரில் ஐ. நா. தலைமைப் பார்வையாளரான ஜெனரல் நிம்மோ நேற்று இங்கு வந்து சேர்ந்ததையடுத்து, உடனடியாக யுதாண்டைச் சந்தித்து காஷ்மீரின் சமீப நிலைமைபற்றி விளக்கினர். யுதாண்டின் அழைப்புக்கிணங்க ஜெனரல் நிம்மோ நியூயோர்க் வந்து சேர்ந்தார்.

காஷ்மீர்பற்றி நிருபர்களுக்கு எவ்வித பேட்டியும் அளிக்க வேண்டாம் என யுதாண்ட், ஜெனரல் நிம்மோவைக் கேட்டுக் கொண்டதாக அறிவிக்கப்படுகிறது.

### ஐ. நா.வில் சிரத்தை

அங்கு இந்தியப் படைகள் எல்லைக் கோட்டைக் கடந்தது பற்றி நியூயோர்க்கில் ராஜதந்திர வட்டாரங்கள் சிரத்தையுடன் கவனித்து வருகின்றன. காஷ்மீர்பற்றிய இந்தியாவின் கொள்கையில் புதிய திருப்பத்தை இது ஏற்படுத்தியிருப்பதாக இவ்வட்டாரங்கள் கருதுகின்றன.

### குரோமிக்கோவுடன் சந்திப்பு

நேற்று மாஸ்கோவிலுள்ள இந்தியத் தூதர் திரு. கவுல் ரஷ்ய வெளிநாட்டுமந்திரி திரு, குரோமிக்கோவைச் சந்தித்து சிறைப்பிடிக்கப்பட்ட இரு பாகிஸ்தான் அதிகாரிகள் அளித்த வாக்குமூல தஸ்தாவேஜுகளைச் சமர்ப்பித்தார். காஷ்மீரில் பாகிஸ்தான் ஊடுருவல்காரர்கள் ஒளிந்திருக்கும் பகுதிகளைக் காட்டும் நிலப்படம் ஒன்றையும் அவர் கையளித்தார்,

கெய்ரோவிலுள்ள இந்தியத்தூதர் நேற்று ஐக்கிய அராபியக் குடியரசுப் பிரதமர் திரு. அலிசாப்ரியைச் சந்தித்து காஷ்மீர் நிலைமை பற்றிவிளக்கினர். கெய்ரோ வட்டாரங்கள் பாகிஸ்தானுக்குச் சாதகமாக இல்லை எனக் கூறப்படுகிறது,

### பிரிட்டன் வேண்டுகோள்

இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இருநாடுகளும் காஷ்மீரில் அமைதியை ஏற்படுத்துவதில் யுதாண்டடுடன் ஒத்துழைக்குமாறு பிரிட்டன் கேட்டுக் கொண்டிருக்கிறது. சாம்ராஜ்ய மந்திரி திரு. பொட்டம்லி நேற்று இருநாட்டுப் பிரதிநிதிகளையும் தனித்தனியே சந்தித்துப் பேசினர்.

இந்திய மந்திரிசபை நேற்றுக் கூடி புதிய நிலைமை பற்றி ஆராய்ந்தது. தமது காஷ்மீர் விஜயம்பற்றி திரு. சாவன் அப்போது விளக்கினர்.

நேற்றிரவு ஊடுருவல் காரர்களுக்கும். இந்தியத் துருப்புகளுக்குமிடையே எவ்விதக் கைகலப்பும் ஏற்பட்டதாகத் தகவல் கிடைக்கவில்லை என புதுடில்லிச் செய்திகள் கூறுகின்றன.

### கட்சிகள் வரவேற்பு

இந்தியத் துருப்புக்கள் எல்லைக்கோட்டைக் கடந்தது பற்றி டில்லியில் அரசியல்கட்சித் தலைவர்கள் பாராட்டுத் தெரிவித்திருக்கின்றனர். பாகிஸ்தான் ஊடுருவல்காரர்களை விரட்டியடிக்கும் உறுதியை இது காட்டுவதாக ஜனசங்கக் கட்சி வரவேற்றிருக்கிறது. ஊடுருவலைச் சமாளிக்க உறுதியான நடவடிக்கை என சம்யுக்த சோஷலிஸ்ட்கட்சி கூறியிருக்கிறது,

குவாலியர் முஸ்லிம்கள் எல்லைக்கோடு தாண்டப்பட்டிருப்பது குறித்து பாராட்டுத் தெரிவித்திருக்கிறார்கள்.

ரஷ்டிரியசுயம் சேவாசங்கம் புதிய நடவடிக்கையை வரவேற்றிருக்கிறது.

ஊடுருவல்காரர்களைச் சிறைப்பிடிப்பதில் விரைந்து செயலாற்றுவதையும் உறுதிநிலையையும் குறித்துப் பலர் திரு. சாஸ்திரிக்கு பாராட்டுத் தெரிவித்தனர்.

# "1200 இந்திய துருப்புக்கள் இதுவரை கொல்லப்பட்டனர்

## 'காஷ்மீர் குரல்' அறிவிப்பு

ராவல்பிண்டி, ஆக. 27

டிட்வால் பகுதியில் இந்தியத் துருப்புக்கள் முன்னேறி வரும்பாதை பூரணமாக அடைக்கப்பட்டு விட்டதென்றும், இந்தியத் துருப்புக்களுக்குப் பெருஞ் சேதம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதென்றும் பாகிஸ்தான் அதிகார வட்டாரங்கள் கூறின.

### எச்சரிக்கை

எல்லைக்கோடு தாண்டப்படுவது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்துமென்றும் தாங்கள் பிடித்த பாகிஸ்தான் காவல்நிலைகளிலிருந்து இந்தியா வெளியேருவிட்டால் அனர்த்தம் விளையும் என்றும் அஸாத்காஷ்மீர் தலைவர் திரு. இப்ராஹிம் எச்சரித்திருக்கிறார்.

### 1200 இந்தியர் மாண்டனர்?

கடந்த திங்கட்கிழமையுடன் முடிவடைந்த ஒரு வார காலத்தில் 3 அதிகாரிகள் உட்பட 218 இந்தியர்கள் கொல்லப்பட்டனர் என்றும் 43 பேர் காயப்படுத்தப்பட்டனர் என்றும் "காஷ்மீரின் குரல்" வானொலி அறிவித்தது. இதுவரை 1200 இந்தியத் துருப்புக்கள் கொல்லப்பட்டதாயும், ஏராளமான ஆயுதங்களும் வெடிமருந்துகளும் கைப்பற்றப்பட்டதாயும் அது மேலும் கூறியது.

பாகிஸ்தான் தரப்பில் 7 பேர் மட்டுமே கொல்லப்பட்டதாயும், 12 பேர் காயமடைந்ததாயும் அது கூறியது. இந்தியத் துருப்புக்கள் காஷ்மீர் மக்கள் மீது அட்டூழியம் புரிந்து வருவதாயும், வீடுகளுக்குத் தீ வைத்து வருவதாயும் அது மேலும் கூறியது.

### ஐ. நா.வுக்கு சவால்

எல்லைக் கோட்டைத் தாண்டுவதாக திரு. சாவன் கூறுவது ஐ. நா. தீர்மானத்தை மீறுவதாகும் என்றும் ஐ. நா.வுக்கு அது ஒரு சவால் என்றும் அதுமேலும் கூறியது.

உலக முஸ்லிம் நாடுகள் விடுதலைப் போராட்டம் வெற்றிபெறப் பிரார்த்திக்க வேண்டும் என புரட்சி சபை வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

### 40,000 மக்கள் வெளியேற்றம்

எல்லைக்கோட்டை ஒட்டியுள்ள 40,000 மக்களை அப்புறப்படுத்தப்பட்டு, இந்தியத் துருப்புக்கள் அங்கு குவிக்கப்பட்டிருப்பதாய் அது மேலும் அறிவித்தது.

## லீயின் வீட்டுக்கு பலத்த காவல்

சிங்கப்பூர், ஆக. 27

சிங்கப்பூர் பிரதமர் திரு. லீ குவான்யூவின் வாசஸ்தலத்தைச் சுற்றிப் பலமான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப் பட்டிருக்கின்றன. பிரதமரைக் கொலைசெய்ய நடைபெற்ற சதியைத் தொடர்ந்து கடும் கண்காணிப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

## ஒழுங்கை பராமரிப்போம்

அமிர்தசரஸ், ஆக. 27

பஞ்சாபில் சட்டத்தையும் ஒழுங்கையும் பராமரிக்கும் விஷயத்தில் அரசாங்கம் உறுதியான நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமென முதன்மந்திரி திரு. ராம் கிஷன் கூறினர்.

மாஸ்டர் தாராசிங், சாந்த் பத்தேசிங் ஆகியோரின் போக்கை அவர் கண்டித்தார்.

## ஷோலாப்பூரில் 95 பேர் கைது

கல்கத்தா, ஆக. 27

கேரளத்தில் உண்ணுவிரதம் இருந்துவரும் இடதுசாரி கம்யூனிஸ்டுகளை ஆதரித்து நேற்று கல்கத்தாவில் 200 பேர் பட்டினி வேலை நிறுத்தத்தில் [illegible] ஷோலாப்பூரில் 95 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

## துருப்புக்கள் வாபஸ் ஆரம்பம்

கெய்ரோ, ஆக. 27

ஏமனிலிருந்து ஐக்கிய அராபியக் குடியரசுத் துருப்புக்கள் வாபஸ்பெற ஆரம்பித்திருக்கின்றன.

## மொரீஷியஸ்

லண்டன், ஆக. 27

மொரீஷியஸ் தீவுக்கு, காமன்வெல்த்திற்குள் சுதந்திரம் வழங்கப்படவேண்டுமென அந்நாட்டுப் பிரதமர் திரு. ராம்குலாம் கூறினர்.

## விண்வெளி சஞ்சாரம்

கேப்கென்னடி, ஆக. 27

அமெரிக்க வானவெளிப் பிரயாணிகளான கூப்பரும், கொன்ராடும் இன்று 6வது தினமாக பூவலம் வந்து கொண்டிருக்கிறார்கள். திட்டமிட்டபடி ஞாயிற்றுக் கிழமை அவர்கள் தரையிறங்குவர்.

## பிரதமர் நிவாரண உதவி

புதுடில்லி, ஆக. 27

காஷ்மீர் எல்லைக்கோட்டிலிருந்து வெளியேற்றப்பட்ட மக்களுக்கு உதவும் பொருட்டு பிரதம மந்திரி நிவாரண நிதியிலிருந்து 50,000ஐ திரு. சாஸ்திரி வழங்கியிருக்கிறார். ஊடுருவல்காரர்களின் தீவிபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏற்கனவே அவர் 50,000 ரூபா வழங்கியிருக்கிறார்.

## தமிழ்நாட்டில் எஃகு ஆலை

சென்னை, ஆக. 27

தமிழ்நாட்டில் எஃகு ஆலை ஒன்றை அமைப்பது பற்றி ஆராயும்பொருட்டு ஐப்பானிய சர்வே குழுவொன்று இங்கு விஜயஞ்செய்திருக்கிறது. முதன் மந்திரி, தொழில் மந்திரி ஆகியோரை அது சந்தித்தது.

## பிரிட்டன் குற்றச்சாட்டு

லண்டன், ஆக. 27

வியட்னுமில் அமைதிப் பேச்சு நடைபெறுவதற்கான முயற்சிக்கு ரஷ்யா முட்டுக்கட்டை இட்டுவருவதாகப் பிரிட்டன் குற்றஞ் சாட்டியிருக்கிறது. தென் வியட்னுமில் வியட்காங்கியர் தங்கள் நடவடிக்கைகளைத் தளர்த்துவதாயிருந்தால் வடவியட்னும்மீது குண்டுவீச்சு நிறுத்தப்படலாமென அமெரிக்கா, பிரிட்டனிடம் கூறியிருக்கிறதாம்.

## ஜோன்ஸன்

வாஷிங்டன், ஆக. 27

லொஸ்ஏஞ்சல்ஸில் நடைபெற்ற இனக்கலவரம் தலைநகர் வாஷிங்டனுக்கும் பரவக்கூடுமென்றும் எனவே விவேகமுடன் செயலாற்ற வேண்டுமென்றும் ஜனதிபதி ஜோன்ஸன் எச்சரித்திருக்கிறார்.

## கிரீஸ்

ஏதென்ஸ், ஆக. 27

கிரீஸில் வலதுசாரி முன்னேற்றக்கட்சி, புதிய பிரதமர் சிரிமோகாஸ் மீது அவநம்பிக்கை தெரிவித்திருப்பதால், பார்லிமெண்டில் நம்பிக்கைத் தீர்மானம் வெற்றிபெறுவது துர்லபம் எனக் கருதப்படுகிறது.

## அடினேர் கண்டனம்

பொன், ஆக, 27

ஜெர்மனியில் பிரிட்டன் அனுஷ்டிக்கும் அணுஆயுதக்கொள்கையை முன்னுள் பிரதமர் அடினேர் கண்டித்திருக்கிறார்.

## சன்மார்க்க சங்க நூற்றுண்டு விழா

வெள்ளவத்தை, சனி

திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்கசுவாமிகள் நிறுவியுள்ள சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தின் நூற்றுண்டுவிழா இன்று மாலை 6-30 மணிக்கு வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிஷனில் ஆரம்பமாகும். விழாவிற்குத் திரு. இரா. சபாநாயகம் தலைமை தாங்குவார். அருட்பாடல்கள் ஓதுதலையடுத்து திரு. க. இராமச்சந்திரா, பேராசிரியர் திரு. அ. ச. ஞானசம்பந்தன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

## வானெலிக் கலைவிழா

யாழ்ப்பாணம், சனி

இலங்கை வானொலி தேசிய ஒலிபரப்பின் தமிழ் நிகழ்ச்சிகள் பகுதியினரால் இன்று மாலை 6-30 முதல் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் வானொலிக் கலைவிழா இலவசமாக நடத்தப்படவிருக்கிறது. 10 வயதுக்குட்பட்ட சிறுவர் அனுமதிக்கப் படமாட்டார்களென அறிவிக்கப்பட்டுள்ளது.

## அரசாங்க அதிபருக்கு எம். பி. தந்தி

யாழ்ப்பாணம், சனி

கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் யாழ். அரசாங்க அதிபருக்குக் கீழ்க்கண்ட விஷயமடங்கிய தந்தியொன்றை அனுப்பியுள்ளார்.

சகாய வேலையில் ஈடுபட்டு உழைப்பவர்களுக்கு தமது கமத்தில் விதைப்புக் காலத்தில் வேலைசெய்யும் பொழுது இரண்டு கிழமைக்கு மேற்படாத காலத்திற்கு சகாயநிதி வழங்கப்படும் என்பது குறித்து இதுவரை எனது தொகுதி மக்களுக்கு அறிவிக்கப்படவில்லை. இதை காரியாதிகாரிகள் மூலம் எல்லோருக்கும் அறிவிக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

## வவனியாவுக்கு புதியஅரசாங்க அதிபர்

வவனியா, வெள்ளி

வவனியாவுக்கு புதிய அரசாங்க அதிபராக திரு. பாஸ்கரலிங்கம் அடுத்த மாதம் 1-ந் திகதியிலிருந்து நியமிக்கப்படவிருப்பதாக அறியப்படுகிறது.

இவர் முன்பு புத்தளம், களுத்துறை ஆகிய இடங்களில் அரசாங்க அதிபராகக் கடமையாற்றியுள்ளார். தற்பொழுது தபால்பிரதம காரியாலயத்தில் பரிபாலன உத்தியோகத்தராகக் கடமையாற்றுகின்றார்

## ஸ்தானிகராகலாம்

பம்பலப்பிட்டி, வெள்ளி

திரு. றெபேர்ட் குணவர்த்தன சீன மக்கள் குடியரசின் இலங்கை ஸ்தானிகராக நியமிக்கப்படலாம் எனத் தெரியவருகிறது. திரு. குணவர்த்தன, கைத்தொழில் மந்திரி திரு. பிலிப் குணவர்த்தனவின் சகோதரராவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது மொழி தோன்றினுல் பல பிரச்னைகள் தீரும்

## பஹாய் இயக்க பிரமுகர்கருத்து

உடுப்பிட்டி, வெள்ளி

''உலக நாடுகள் பலவற்றில் இன்று மொழிப்பிரச்னையும், இனப்பிரச்னையும் மலிந்து காணப்படுகின்றன. மாண்புமிக்க அரசியல் தலைவர்கள் சிலர் தகாதமுறையில் குண்டுபட்டும், கத்திக் குத்தினுலும் இறந்துபட்டதற்கு முக்கிய காரணம் இப்பிரச்னைகளே. நாம் கூறுவது போன்று உலகமக்கள் அனைவருக்குமாக ஒரு பொதுமொழி தோன்றி அனைவரும் பஹாய் இயக்கத்தினராக மாறினுல் இப்பிரச்னைகள் தாமாகவே தீருவதுடன் உலகமே புனிதமயமாகிவிடும்.'' இவ்வாறு பஹாய் இயக்கத் தூதரும், தேசிய ஞானசபையின் போதகருமான திரு. கீத்டி பாலோ கரவெட்டி கிழவிதோட்டப் பிள்ளையார் கோவிலடியில் நடைபெற்ற பஹாய் இயக்கக் கூட்டத்தில் பேசுகையில் கூறினுர்.

திரு. செ. சுவர்ணராசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. கீத்டி பாலோ தொடர்ந்து கூறியதாவது:

சர்வதேச நீதிமன்றம் அமைக்கவேண்டுமென்றும், சகல மக்களுக்கும் ஒரேவிதமான கல்வியளிக்கப்படவேண்டுமென்றும் நமது இயக்கம் ஆரம்பகாலம் முதலே வற்புறுத்திவருகின்றது. உண்மை எப்பொழுதும் ஒன்ருகத்தான் இருக்க முடியும். அதனை எவரும் மறுக்கமுடியாது. கடவுள் ஒருவர் இருக்கிருர். ஆனுல் அவர் எல்லா மக்களுக்கும் பொதுவானவர். அவரை ஒருவராக நினைத்து வணங்குவதுதான் சிறப்பு.

திரு. எஸ். சுவர்ணராசா பேசுகையில், ''ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று கூறி அலையும் அறிவிலிகாள்' என்று பாரதியாரே கூறியுள்ளார். மனிதரிடையே மலிந்துள்ள எத்தனையோ பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு முயலாமல் தெய்வம் உண்டா இல்லையா என்ற விவாதங்களிலும் சாதிப் பாகுபாடுகள் காண்பிப்பதிலும் மூடக்கொள்கைகளைப் பேசுவதிலும் வீணே காலத்தை மக்கள் விரயமாக்குகிறுர்கள். இந்நிலைமை படித்தமக்கள் மத்தியிலும் பரவியுள்ளதுதான் பரிதாபத்திற்குரியது. இது முற்ருக மாற்றியமைக்கப்பட வேண்டும்'' என்று கூறினுர்.

திருவாளர்கள் பி. செல்வராசா, எஸ். தர்மரத்தினம் ஆகியோரும் பேசினர். கூட்ட முடிவில் சில வாலிபர்கள் பஹாய் இயக்க அங்கத்தினர்க்ளாகச் சேர்ந்து கொண்டனர்,

## மழையின் விளைவு

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணத்தில் உள்ள பல்வேறு பகுதிகளிலுள்ள வீதிகளும், ஒழுங்கைகளும் அண்மையில் பெய்த மழையினுல் மிகவும் சீர்கேடான நிலைக்குள்ளாகியுள்ளன. பல இடங்களிலுள்ள ஒழுங்கைகள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

வல்வெட்டியில் உள்ள பெரும்பான்மையான ஒழுங்கைகளும், தெருக்களும் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலையிலிருக்கின்றன. சேறும், சகதியும் மிக்கதாக்காணப்படும் இந்த ஒழுங்கைகளால் நடந்துசெல்வதே மிகவும் கஷ்டமாக இருக்கிறது.

இதே போன்று நவாலி, சங்குவேலி, கந்தரோடை, வட்டுக்கோட்டை ஆகிய பகுதிகளிலுள்ள வீதிகளும், ஒழுங்கைகளும் சீர்கேடான நிலையிலுள்ளன.

## மந்திரியின் விஜயம்

பருத்தித்துறை, வெள்ளி

அடுத்த மாதம் வடபகுதிக்கு விஜயம் செய்யும் சுகாதார அமைச்சர் திரு. எம். டி. எச். ஜெயவர்த்தனு உடுப்பிட்டி, பருத்தித்துறைத் தொகுதிகளுக்கும் விஜயம் செய்வார் எனத் தெரியவருகிறது.

இங்கு விஜயம் செய்யும் அமைச்சர் வடமராட்சி குடும்ப நலத்திட்டப் பயிற்சி நிலையம் ஒன்றை பருத்தித்துறை — தம்பசெட்டி ரோட்டில் திறந்துவைப்பார் எனவும் மந்திகை (புலோலி) அரசினர் வைத்தியசாலை, வல்வெட்டித்துறை அரசினர் வைத்திய சாலை ஆகியவற்றுக்கும் உத்தியோகபூர்வமாக விஜயம் செய்வார் எனவும் அறியப்படுகிறது.

## பஸ்ஸில் மோதுண்டு குழந்தை மரணம்

சாவகச்சேரி, வெள்ளி

பளையிலிருந்து 6 மைலுக்கப்பாலுள்ளவள்ளியம்பாலை என்ற கிராமத்தில் யாழ்ப்பாணம் கண்டிவீதியில் செபஸ்தியான் என்பவருடைய 4 வயது ஆண்குழந்தை வீதியைக்கடக்க முயற்சிக்கையில் உருத்திரபுரத்திலிருந்து யாழ்ப்பாணம் வந்துகொண்டிருந்த இ. போ. ச. பஸ்ஸினுல் மோதுண்டார்.

சாரதி காயமடைந்தவரை அதே பஸ்ஸில் கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றபொழுது அவர் வழியில் மரணமானுர். சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. பி. ரூபேர்ட் சில்வா விசாரணைகள் நடத்தினுர்.

## ரூபா 100 அபராதம்

முல்லைத்தீவு, வெள்ளி

முள்ளியவளை வாசியான கே. பாலசிங்கம் என்பவர் சைக்கிள் திருடியதாக முல்லைதீவுப் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு முல்லைத்தீவு மாஜிஸ்டிரேட் திரு. ஓ. எஸ். எம். செனிவரத்ன முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. எதிரியைக் குற்றவாளியாகக் கண்ட மாஜிஸ்டிரேட் ரூபா 100 அபராதம் விதித்தார். அபராதம் செலுத்தத் தவறினுல் ஆறு மாதம் கடூழிய சிறைத்தண்டனை அனுபவிக்கவேண்டுமெனத் தீர்ப்பளித்தார்.

முல்லைத்தீவு பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எம். ஈ. குரூஸ் வழக்கை நடத்தினுர்.

ஊர்காவற்றுறை, வெள்ளி

''சரவணை சேரிப்பகுதியில் தோற்றுவிக்கப்பட்ட சரவணை செல்வக்கதிர்காமசுவாமி எனக் கூறப்படும் வழிபாட்டு நிலையம் சமூக ஒற்றுமைக்கும் சைவசமய வளர்ச்சிக்கும் உரிய ஆத்மீக சக்தியுடைய புனித இடம்'' என சரவணை கிராம முன்னேற்றச்சங்கம் அங்கீகரித்துள்ளது

தலைவர் திரு. ஆ, மார்க்கண்டு தலைமையில் நடைபெற்ற சங்கக் கூட்டத்தில் மேற்படி வழிபாட்டு நிலையத்தை அங்கீகரிப்பதெனவும் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் அடியார்கள் பெருமளவு வருவதால் அமைதி நிலைமை உண்டாக்க பொலிஸ் பாதுகாப்பு வேண்டும் என்ற தீர்மானமும் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

சினிமா விமர்சனம்

## 'கைகொடுத்த தெய்வம்'

சிவாஜிகணேசனும் ராஜேந்திரனும் ஒன்ருக நடித்திருக்கிருர்களென்ருல் ஏதோ நட்பைப் பின்னணியாக வைத்து எடுக்கப்பட்ட கதை என்று யாருமே சொல்லிவிடலாம். என்ருலும் 'கைகொடுத்த தெய்வ'த்தில் இவர்களின் 'நட்பு' புதியதொரு கோணத்தில் பின்னப்பட்டிருப்பதால், கதையின் ஓட்டத்தில் எதுவிதமான 'தடை'யின்றிச் செல்கின்றது.

தனக்குக் கிடைத்த ஒரு பெரும் பதவியைதன் நண்பனுக்கு அளித்து—தான் ஒரு எளிய வேலையை ஏற்றுக்கொள்ளும் உத்தமனை—நண்பனுக்குக் கல்யாணம் செய்து வைத்து அந்தப் பெண்ணைத் தன் உடன் பிறவாத் தங்கையாக நினைத்து அன்பு செலுத்தி, இறுதியில் ஊரார் பழிக்கு ஆளாகும் தியாகியை— நட்புக்கு இலக்கணமாகத் திகழும் அந்த 'மனிதத் தெய்வ'த்தைப் பின்னிப்பிணைத்து சித்தரிக்கப்பட்டிருக்கும் கதை தான் 'கைகொடுத்த தெய்வம்',

மராட்டிய உடையணிந்திருக்கும் தன் நண்பனின் மனைவியை, அவள் கணவன் அருகே இருக்கத்தக்கதாகவே உள்ளே இழுத்துக் கொண்டுபோய் தமிழ் நாட்டுடையுடுத்தி, பின்னலிட்டு, பொட்டு வைத்துவிடும் காட்சி நண்பர்களாகிய இருவர்களுக்கிடையேயுமுள்ள அன்னியோன்னியத்தை காட்டுவதற்காக எடுக்கப்பட்டிருந்த போதிலும் நம்ப முடியாத ஒன்ருயிருக்கிறது. ஆனுலும் சிவாஜி கணேசனின் நடிப்பு இவ்விடத்தில் உச்சக்கட்டத்தை அடைந்துவிடுகிறது. எனினும் சிவாஜியின் நடிப்பு சில இடங்களில் 'ஓவ'ராகி விடுகிறது போலத்தான் தோன்றுகிறது.

தன் நண்பனுன ரகு (சிவாஜி) வைப் பெண்பார்க்க ஊருக்கு வரும்படி கடிதம் வந்த மகிழ்ச்சியால் ராஜேந்திரனும், அவர் மனைவியாக நடிக்கும் கே. ஆர். விஜயாவும் துள்ளிக் குதித்து சிவாஜி கணேசனைக் 'கிண்டல்' செய்கிருர்கள். ''மங்கள மேளம் பொங்கி முழங்க மணமகள் வந்தாள்...'' என்று விஜயா பாடும் காட்சியில், ராஜேந்திரன் அபிநயம் பிடித்து ஆடும் காட்சி எல்லோரையும் கவர்ந்து விடுகிறது. கே. ஆர். விஜயா இக் காட்சியில் ''அப்ளாஸ்'' வாங்கி விடுகிருர்.

பருவத்தில் குமரியாக— ஆனுல் உள்ளமோ கள்ளம் கபடமறியாத குழந்தையாக —'அப்பாவி'ப் பெண்ணுக நடிக்கிருர் சாவித்திரி. ''அப்பா, நான் கெட்ட பெண்ணு... சொல்லப்பா...'' என்று குழந்தைத்தனமாக அவர் தன் தந்தையிடம் கேட்டும் ஒரேயொரு இடமே போதும் அவரின் சிறந்த நடிப்புக்கு. குழைந்து குழைந்து அவர் பேசுவதும் களங்கமில்லாமல் அவர்சிரிப்பதுவும்ரசிகர்களைப் பெரிதும் கவரத்தான் செய்கிறது.

எம்.ஆர். ராதா வழக்கம் போல 'ரவுடி'த்தனம் செய்யும் வில்லனுக நடித்துள்ளார். எஸ். வி. ரங்கராவ் நடிப்பு நெஞ்சை உருக்கி விடுகிறது. புஷ்பலதா புதியதோர் பாத்திரமேற்று மிகவும் கச்சிதமாக நடித்துள்ளார்.

கே. எஸ். கோபாலகிருஷ்ணனின் படமென்ருல் படத்தின் இறுதியில் யாரையாவது சாகடித்து விடுவாரென்ற முத்திரைக்கு இப்படமும் இலக்காகி விட்டது.

எனினும் டைரக்டர் கோபாலகிருஷ்ணனின் கைதேர்ந்த டைரக்ஷனை கைகொடுத்த தெய்வத்திலும் நாம் காணக் கூடியதாக இருக்கிறது.

பெயருக்கேற்பதரத்துக்கு கைகொடுத்துள்ளது 'கைகொடுத்ததெய்வம்'

—பாமா




## கொழும்பு

### சனி 28-8-65

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00).

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிக்கநற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 தேர்ந்தஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்,

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 படப் பாட்டுக்கள்.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 செய்திச்சுருள், 7-00 அளவை இசைவிழா, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 விமர்சனம், 9-30 பாட்டு, 10-00 அளவை இசைவிழா.

### ஞாயிறு 29-8-65

(செய்திகள் காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிக்க நற்சிந்தனை, 7-00 குரலிசை, 7-45 தமிழோடிசைபாடல், 8-00 பக்திப்பாடல்கள், 8-15 தமிழ் மூலம் சிங்களம், 8-30 ஞானுஞ்சலி, 9-00 முஸ்லிம் பாடசாலை, 9-30 படப் பாட்டுக்கள், 11-30 சிறுவர் மலர்.

பகல் 12-15 நேயர்விருப்பம், 1-00 மத்தாப்பு.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள். 5-15பாட்டு, 5-45 திரை இசை,

இரவு 6-10 வாத்திய இசை, 6-15 ஜித்துப்பிட்டி சிவசுப்பிரமணிய ஆலயக் கூட்டுப்பிரார்த்தனையும் பூசையும் அஞ்சல், 7-15 நாடக அரங்கு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 மனைவிளக்கு—மாதர் நிகழ்ச்சி, 9-30 [illegible], 10-15 [illegible]

## பார்வையிட்டனர்

வவனியா, வெள்ளி

வவனியாவிலுள்ள பம்பாய் வெங்காயத் தோட்டங்களை மாவட்ட விவசாய உத்தியோகத்தர் திரு. நடேசன் தலைமையில் வவனியா மாவட்டத்தில் உள்ள காரியாதிகாரிகளும், மற்றும் உயர் உத்தியோகத்தர்களும், சமூகசேவைப் பகுதிஉத்தியோகத்தர்களும் பார்வையிட்டனர். பம்பாய் வெங்காயம் வவனியாவில் நல்ல விளைச்சலைக் கொடுத்துள்ளதென்பது குறிப்பிடத்தக்கது.

## வவனியாவில் புதிய பஸ்நிலையம்

வவனியா, வெள்ளி

வவனியாவில் புதிதாகக் கட்டப்படும் பஸ்நிலையத்தின் கட்டிட வேலைகள் முடிவடையும்கட்டத்திலுள்ளது. இந்த பஸ்நிலையம் விரைவில் திறக்கப்படவிருக்கிறது.

இப்புதிய பஸ்நிலையம், பிரயாணிகளுக்குச் சகல வசதிகளும் கொடுக்கும் விதத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

REGAL—JAFFNA
NOW SHOWING!
Ray Milland
in
PANIC IN YEAR ZERO
(Cinema Scope)

இப்பொழுது திரையிடப்படுகிறது !

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி பிற்பகல் 2-30, 6-30, 10-30
சனி ஞாயிறு 4 காட்சிகள்

சிவாஜி கணேசன், சாவித்திரி
எஸ். எஸ் ராஜேந்திரன்
கே. ஆர். விஜயா
நடிக்கும்
கைகொடுத்த தெய்வம்

ராஜா (யாழ்ப்பாணம்)

ஆறறிவு படைத்த மனிதன் தன்னினத்தைச் சார்ந்தவனையே மிருகமாக்கத் துணியும் போது எழும் உரிமைக் குரல்தான் — ''நானும் மனிதன்தான்''

விஜயபுரி வீரன் புகழ் ஆனந்தன்-சந்திரகாந்தா
பாண்டி செல்வராஜ், ஷீலாதேவி, அசோகன், நாகேஷ்
கண்ணன், ஓ. ஏ. கே. தேவர் நடிக்கும்
ஆனந்த மூவிஸ்
நானும் மனிதன்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

## அறிவித்தல்
### சாவகச்சேரி டிஸ்திறிக் கோடு

இல. 2958/8.

சதாசிவம் சரவணமுத்து, சங்கத்தானை, சாவகச்சேரி, வழக்காளி.

**VS**

1. வாரித்தம்பி கைம்பெண் தையல்நாயகம்,
2. வேலுப்பிள்ளை கோவிந்த பிள்ளை, சங்கத்தானை, சாவகச்சேரி.

எதிராளிகள்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதி, சாவகச்சேரி கோயிற்பற்று, சாவகச்சேரி இறை குடியிருந்த வளவு, காக்கையன் வளவு, விளாத்தியடி என்னும் பெயர்களையுடையதும், நிலப்பரப்பு, 18 1/2 கொண்டதும், ஆனல் ஆட்சிப்படி நிலப்பரப்பு 20 உடையதுமான காணியை பிரிவிடுதல் செய்வதற்கு மேற்கூறிய வழக்காளி மேற்படி இலக்கத்தில் ஒரு பிரிவிடுதல் வழக்கைத் தாக்கல் செய்திருக்கிறார் என இத்தால் அறிவிக்கப்படுகிறது. அக்காணியின் எல்லைகள் பின்வருமாறு:

கிழக்கு- ஒழுங்கை

வடக்கு. விசாகப் பெருமாள் கைம்பெண் தெய்வானைக்கு உரிய ஆதனம்.

மேற்கு- நடராசா பெண் பராசத்திக்கும் ஞானமூர்த்தி முருகேசுவுக்கும் உரிய ஆதனங்கள்.

தெற்கு-சபாரத்தின ஐயர் தியாகராசா ஐயரின் சிறுபிள்ளைகளுக்கு உரிய ஆதனம்.

இக்காணியை 1965, ஏப்ரல் 30-ம் திகதி உலாந்தா கே. ஐயாறு - அவர்களால் அளந்து 430-ம் இலக்க படத்தில் விவரிக்கப்பட்டுள்ளது,

இவ்வழக்கு 1965, செப்டம்பர் 30-ம் திகதி மேற்படி கோட்டில் கூப்பிடப் படும்.

1965 ஒகஸ்ட் 26
கோட்டுக் கட்டளைப்படி
செ. சடாச்சரம்
(செயலாளருக்காக)
தயாரித்தவர்,
வே. கனகசபை
வழக்காளியின் புறக்டர்.
26-8-65. 821

## வீடு தீக்கிரை

மன்னார், வியாழன் கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவில் மன்னார் மின்சாரநிலையத்தில் கடமையாற்றும் திரு. செல்வத்துரை என்பவரின் வீடு முற்ருக எரிந்ததால் சுமார் மூவாயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் சாம்பலாகியது. போத்தல்விளக்கால் இத்தீவிபத்து ஏற்பட்டதாக சொல்லப்படுகின்றது.

# விளையாட்டுப் பகுதி

'ஈழநாடு' வெற்றிக்கிண்ண

## கூடைப்பந்தாட்டப்போட்டி

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி மைதானத்தில் 'ஈழநாடு' வெற்றிக்கிண்ணத்திற்கான போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டத்தில் இரண்டு விளையாட்டுகள் இடம்பெற்றன. கப்பற்படையினரும் கோப்பாய் விளையாட்டுக் கழகத்தினரும் ஆடிய ஆட்டத்தில் கோப்பாய்க் கோஷ்டிக்கு வெற்றி கிட்டியது. இடைவேளையின்போது கோப்பாய்க்கழகம் 28 புள்ளிகளும் கப்பற்படையினர் 10 புள்ளியும் எடுத்திருந்தனர்.

சென்றமுறை ஆடியதிலும் பார்க்க மிகவும் திறமையாக கோப்பாய் கழகத்தினர் ஆடி 62 புள்ளிகளைப்பெற்றனர். கப்பற்படையினர் 28 புள்ளிகளைப் பெற்றனர்.

கோப்பாய் கழகம் 62

சோதிலிங்கம்-4, விக்கினேஸ்வரலிங்கம்-12, நவராஜா-20, கமல்ராஜன்-10, அரிரபாலன்-4, நாகரத்தினம்-4, பாலகிருஷ்ணராசா-4.

கப்பற்படை 28 புள்ளிகள்— டொமினிக்-10, அந்தோனியஸ்-14, இலங்கை திலகன்-2, டெலிமா-2.

திரு. சுந்தரலிங்கம் மத்தியஸ்தராக கடமையாற்றினார்.

பயனியர் கோஷ்டியினரும் வை. எம். ஜி. கோஷ்டியினருக்குமிடையே நடைபெற்ற ஆட்டம் முதல் 10 நிமிஷங்களுக்கும் இரு கோஷ்டியினரும் சமமாக ஆடினர், இடைவேளையின் போது பயனியர் 24 புள்ளியும், வை. எம். ஜி, 18 புள்ளியும் பெற்றிருந்தனர்.

இடைவேளைக்குப்பின் மிகச் சிறப்பாக ஆடிய அரசரத்தினம் வை. எம். ஜி. கோஷ்டியினர் பக்கம் விளையாடமுடியாததால் பயனியர் கோஷ்டியினர் மிக இலகுவாக புள்ளிகளைச் சேர்த்துவெற்றிபெற்றனர்.

பயனியர் கூடைப்பந்தாட்டக்கழகம் - 56— பாஸ்கரன்-20, இ. சுந்தரலிங்கம்-28, துரைசிங்கம்-4, சண்முகரட்ணம்-4.

வை. எம். ஜி. 37— ஜெகநாதன்-10, சாந்திகரன்-6, டொனல்-13, அரசரட்ணம்-8-

திரு. பரமானந்தமும், திரு. தயானந்தமும் மத்தியஸ்தர்களாக கடமையாற்றினர்.

சென்ற வியாழக்கிழமை காலை நடைபெற்ற ஆட்டத்தில் வை. எம். ஜி. கோஷ்டியினர் வை. எம். சீ. ஏ. கோஷ்டியினரை 14 புள்ளிகளால் தோற்கடித்தனர்.

வை. எம். ஜி. சார்பில் ஆடிய அரசரத்தினம், டொனல்ட், விமல்ராஜன் ஆகியோர் சிறப்பாக ஆடினர்கள்.

வை. எம். சீ. எ. கோஷ்டிக்கு தேவராஜன், தயானந்தன் ஆகியோர் அதிக புள்ளிகளைச் சேர்த்தனர்.

திரு. பத்மநாதன் மத்தியஸ்தராக கடமைபுரிந்தார்.

❀ ❀ ❀

யாழ்ப்பாணம், சனி

'ஈழநாடு' வெற்றிப் போட்டியின் மூன்றுவது நாளான நேற்று வட்டுக்கோட்டை பழைய மாணவர் கோஷ்டியினர் கப்பற்படை கோஷ்டியினரை தோற்கடித்தனர். வழமைபோல் வட்டுக்கோட்டைக் கோஷ்டிக்கு விக்டர் சிறப்பாக ஆடினார்.

வட்டுக்கோடை பழைய மாணவர் கோஷ்டி - 45— விக்டர் 12, செல்வராஜன் -12 ஜெயராஜ்-8, துரைராஜ்-6, தியாகரராசா.4 செல்லை 2.

கப்பற்படையினர் - 24, அந்தோனியார் - 12, டொமினிக் 4, டிலிமா - 4, சூதபிரியல்பிள்ளை - 4.

மத்தியஸ்தர்கள்— திரு. தயானந்தன், திரு. தேவராஜன்.

இரண்டாவது ஆட்டமாக பயனியர் கோஷ்டியினரும் யாழ்ப்பாணம் வை. எம். சீ. எ. கோஷ்டியினரும் கலந்துகொண்டார்கள். வை. எம். சீ. எ. கோஷ்டியினர் மிக மும்முரமாக விளையாடிப் பயனியர்கோஷ்டியினரை 2 புள்ளிகளால் தோற்கடித்தனர்.

## நொத்தாரிஸ்மார்சட்டம் 91-ம் அத்தியாயம் 7-ம் பிரிவின்படியான அறிவித்தல்

ஊர்காவற்றுறை கரம்பன் மேற்கு சிதம்பரப்பிள்ளை கந்தையா ஆகிய நான் யாழ்ப்பாண மாவட்டத்தில் தமிழ் நொத்தாரிசுவாக கடமை பார்க்க என்னை நியமிக்கும் படி இத்திகதி தொடக்கம் ஒருமாதத்தின் பின் கொழும்பு பதிவு காரியகர்த்தர் அவர்களுக்கு விண்ணப்பஞ் செய்யவிருக்கிறேன் என்பதை இதனல் அறியத்தருகிறேன்.

சி. கந்தையா,
கரம்பன் மேற்கு,
ஊர்காவற்றுறை.
27-8-1965. 823

## நொத்தாரிஸ்மார் சட்டம் 91-ம் அத்தியாயம் 7-ம் பிரிவின்படியான அறிவித்தல்

சரவணை, விசுவநாதர் சேதுகாவலர் ஆகிய நான் யாழ்ப்பாண மாவட்டத்தில் தமிழ் நொத்தாரிசுவாக கடமைபார்க்க என்னை நியமிக்கும்படி இத்தேதி தொடக்கம் ஒரு மாதத்தின் பின் கொழும்பு பதிவு காரியகர்த்தர் அவர்களுக்கு விண்ணப்பம் செய்யவிருக்கிறேன் என்பதனை இதனல் அறியத்தருகிறேன்.

வி. சேதுகாவலர்
சரவணை, வேலணை.
27-8-1965 824

## திருமண அழைப்பு

செல்வன்: **சே. சிவராஜா B. Sc**

("வண்ணை சிவராஜா" ஆசிரியர், மகா வித்தியாலயம், சம்மாந்துறை)

செல்வி: **வை. விமலநாயகி**

நிகழும் 29-8-65 ஞாயிற்றுக்கிழமை காலை 7-30 முதல்9-00மணிவரையில்வரும்சுபமுகூர்த்தவேளையில் மணமகளில்லத்தில் இனிது நடைபெறஇருக்கும் திருமணவைபவத்திற்குஉற்றார் உறவினர், நண்பர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மணமகளின் பெற்றோர்:
**திரு. கா. வைத்தியலிங்கம் தம்பதிகள்**
219/4, நாவலர் வீதி,
(கடையிற்சுவாமி வீதி)
யாழ்ப்பாணம்.

மணமகனின் பெற்றோர்:
**திரு. வெ. சேனாதிராஜா தம்பதிகள்**
35/1, பிறவுண் வீதி
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

வரவேற்பாளர்: **திரு. க. கீர்த்திசிங்கமும், பாரியாரும்**
(மனேஜர், காப்புறுதிக் கூட்டுஸ்தாபனம் வவுனியா)
மணமகளின் சகோதரியும் கணவரும்

# வரி விளம்பரம்

### கல்வி

பீ. ஏ; ஜீ. ஏ. கியூ; ஜி. ஸி. ஈ. உயர் சாதாரண தரங்கள் (கலை, விஞ்ஞானம்) சிங்களம், வர்த்தக தமிழ், ஆங்கில வகுப்புகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. **யாழ்ப்பாண டியூட்டோறியல் கல்லூரி.** கைலாசபிள்ளையார் கோயிலடி, நல்லூர் - யாழ்ப்பாணம் 906

### வைத்தியம்

**தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி** முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர் கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம். 771

### விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் 153 D இலக்க காணி சிறிய வீடுடன் (ஒன்றரைப் பரப்பு) விற்பனைக்குண்டு. பள்ளிக்கூடங்கள், ஆஸ்பத்திரி, ஸ்ரேசன் முதலியனவற்றிற்கு அருகாமையில். விபரங்களுக்கு: ஏ. எஸ். கனகரத்தினம். 6/A, சீனியர் லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 919

### வாடகைக்கு

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதிக்கு அருகாமையில் கொக்குவிலில் புதிய ஐந்து அறை வீடு எல்லா நவீன வசதிகளுடனும் வாடகைக்கு உடனடியாகக் கிடைக்கும். பொன்னுத்துரை பத்தர், இல. 7 கொக்குவில் கிழக்கு, கொக்குவில். 939

### தேவை

மக்கள் முன்னேற்ற விடுதிக்கு சமையல்ஆள்தேவை. பெண்களும் விண்ணப்பிக்கலாம். விவரங்களுக்கு;- வித்துவான் க. ந. வேலன், வி. மு. தெரு, பருத்தித்துறை. 940

குமாஸ்தாக்கள், வான் சேல்ஸ்மன்கள், சைக்கிள் விற்பனையாளர்கள் கஷியர்கள் (Cashier) தேவை. நேரில் விண்ணப்பிக்கவும். தி நாஷனல் சேல்ஸ் கோப்பரேஷன், 1/3, மின்சாரநிலைய வீதி, கனிபா கட்டிடம், யாழ்ப்பாணம், 941

சனசமூகநிலைய விளையாட்டுப் போட்டி

## யூலன் இல்லத்துக்கு முதலிடம்

யாழ்ப்பாணம், சனி

நாவாந்துறை சென். மேரிஸ் சனசமூக நிலைய வருடாந்த விளையாட்டுப் போட்டி இரு தினங்கள் நடைபெற்றது. ஆரம்பத்தில் நிலையத் தலைவர் திரு. நீ. எஸ்தாக்கி நிலையக் கொடியை ஏற்றிவைத்தார்.

இந் நிகழ்ச்சிகளில பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பிரதிநிதி திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கலந்து கொண்டார்.

வெற்றிபெற்ற வீரர்களுக்கு உள்ளூர் ஆட்சி உதவி ஆணையாளர் திரு. சீ. மாணிக்கவாசகர் பரிசுகள் வழங்கினார். இவ் வைபவத்தில் நிலையப்பாதுகாவலர் புலவர் திரு. கி. சூசைப்பிள்ளை யூலன் இல்லத் தலைவர் திரு. மி. செபமாலை, மில் இல்லத்தலைவர் திரு. ம. ஆசீர்வாதம், கியோமர் இல்லத் தலைவர் திரு. செ, இராசரத்தினம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். பொருளாளர் திரு. யோ. சந்தியோகு நன்றியுரை கூறினார். இரண்டாம் மூன்ரும் இடங்களை எமில், கியோமர் இல்லங்கள் அடைந்தன.

பொது விளையாட்டுக்களில் வெற்றிபெற்ற வீரர்களின் விபரம்.

25 மைல் சைக்கிள் ஓட்டம்: அ. யேசுதாசன் (கியோமர்), செ. பேதிருப்பிள்ளை (யூலன்), அ. பத்திநாதன் (எமில்), செ. நவரத்தினம் (எமில்), ச. அந்தோனிப்பிள்ளை (எமில்).

5 மைல் மரதன் ஓட்டம்: தே. லிகோறி (யூலன்), நீ. அந்தோனிப்பிள்ளை (எமில்), ச. அன்ரனி (கியோமர்).

1 மைல் ஓட்டம்: நீ. அந்தோனிப்பிள்ளை(எமில்), அ. அருள்ராசா (யூலன்), அ. வென்சஸ்லாஸ் (கியோமர்).

மெதுவான சைக்கிள் ஓட்டம்: அ. கீதபொன்கலன் (கியோமர்), ச. அந்தோனிப்பிள்ளை (எமில்), ச. பொன்ராசா (கியோமர்).

கயிறிழுவை: கியோமர், எமில், யூலன்.

அஞ்சல் ஓட்டம்: கியோமர், யூலன், எமில்.

விநோத உடை: ப. மரியநாயகி (யூலன்), அ. லுக்கேஸ் (கியோமர்), ஆ. தார்சியஸ் (யூலன்).

மேற்பிரிவு நீந்தல்: செ. அறுக்காஞ்சி (எமில்), செ. அந்தோனிப்பிள்ளை (எமில்), அ. லுக்கேஸ் (கியோமர்).

மத்தியபிரிவுநீந்தல்: அ. பத்திநாதன் (எழில்), ச. அன்ரனி (கியோமர்), செ. மரியதாஸ் (கியோமர்).

வள்ளம் தண்டுவலித்தல்: ரா. நேசராசா, ரா. முத்தையா, அ. சீமான்(யூலன்). செ. தங்கராசா, ச. மலக்கியான், யோ. ஆபிரகாம் (யூலன்). ப.சிறில், அ. அவுரூப்பிள்ளை, தோ. மரியதாஸ் (எமில்).

வள்ளம் தாங்குதல்: இ. அல்பிரெட், செ. தங்கராசா, ரா. முத்தையா (யூலன்). தி. திருச்செல்வம், ரா. நேசராசா, நீ. தம்பித்துரை (யூலன்). செ. யோகராசா, அ. லுக்கேஸ், ரா. யோகரத்தினம் (கியோமர்)

பிரிவு விளையாட்டுக்களில் சிறந்த வீரர்களாகத் தெரிவு செய்யப்பட்டோர்:

ஆண்கள்: அதிமேற்பிரிவு: ம. அருமைராசா (யூலன்), மேற்பிரிவு: செ. அமிர்தநாதர் (கியோமர்), மத்திய பிரிவு: ச. அந்தோனிப்பிள்ளை (எமில்), கீழ்ப்பிரிவு: யோ. ஆபிரகம் (யூலன்), அதி கீழ்பிரிவு: செ. அமிர்தநாதன் (எமில்), சி. சித்தாத்துரை (யூலன்), பாலர் பிரிவு:லோ. அன்ரன்(எமில்).

பெண்கள் அதிகீழ்ப்பிரிவு: ஆ. மொனிக்கம்மா(எமில்), பாலர்பிரிவு: யோ. லோரன்சியா (யூலன்).

இப்போட்டிக்கு மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றியவர்களுக்கும் உதவிகள் புரிந்தவர்களுக்கும் நிலையச் செயலாளர் திரு. சூ. அமிர்தநாதர் நன்றி கூறினார்.

## புதிய நிர்வாகிகள்

சாவகச்சேரி, வெள்ளி

மட்டுவில் தெற்கு வளர்மதி படிப்பக நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்;

தலைவர். பொ. நாகமணி, உபதலைவர்: த. சின்னத்துரை, செயலாளர்: மா. சுப்பையா, உபசெயலாளர்: மு, இரத்தினம், பொருளாளர்: ப. செல்லையா, உபபொருளாளர்: ச. சிங்கராசா.

மேலும் 15பேர் கொண்ட நிர்வாகசபையினரும்தெரிவு செய்யப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 43 அதிக வாக்குகளால் பட்ஜட் நிறைவேறியது

## சாதகமாக 98 வாக்குகள்

## பாதகமாக 55 வாக்குகள்

### மூதூர் மஜீத் அரசாங்கத்துக்கு பாதகமாக வாக்களித்தார்

கொழும்பு, வியாழன்

தேசிய அரசாங்கத்தின் முதலாவது பட்ஜட் மீதான வாக்கெடுப்பு இன்றிரவு 8-05 மணிக்கு நடத்தப்பட்ட சமயம் சாதகமாக 98 வாக்குகளும், எதிராக 55 வாக்குகளும் கிடைத்தன. 43 அதிகப்படி வாக்குகளால் பட்ஜட் நிறைவேற்றப்பட்டபோது அங்கத்தினர்கள் பலத்த கரகோஷம் செய்தனர்.

மூதூர் 2-வது எம். பி. திரு, மஜீத் பட்ஜட்டுக்கு எதிராக வாக்களித்தார். பலர் எதிர்பார்த்ததுபோல் அவர் அரசாங்கத்துடன் சேர்ந்து வாக்களிக்கவில்லை.

இன்றைய பட்ஜட் விவாதத்தை திரு. பீட்டர் கெனமன் ஆரம்பித்துவைத்தார். அவர் பேசுகையில், அரசாங்கம் முதலாளித்துவ அடிப்படையில் தான் இயங்கப்போகிறது என்றார்.

முதலாளிமார்களுக்கும், பணக்காரர்களுக்கும் சாதகமாக பட்ஜட் அமைந்திருக்கிறது என்றும், வருமான வரி சலுகைகள் செல்வந்தர்களுக்காக அமைக்கப்பட்டிருக்கிறது என்றும் அவர் கூறினர்,

அவருக்கடுத்து திரு. ஜி. ஜி: பொன்னம்பலம், முற்றும் புள்ளிவிபரங்கள் நிறைந்த சொற்பொழிவொன்றை நிகழ்த்தினர். அரசாங்கத்தின் நல்லநோக்கத்தை திரு. கெனமன் தவறுதலாகப் புரிந்துகொண்டிருக்கிறார் என்றும், அரசாங்கத்தின் பட்ஜட்டில் மக்களுக்கு சலுகை வழங்கப்பட்டிருப்பதாயும், ஜனநாயக ஆட்சியில் இந்த ஜனநாய பட்ஜட்டை சகலரும் ஏற்பார்கள் என்றும் திரு, பொன்னம்பலம் தொடர்ந்து கூறினர்,

முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா பேசியபோது அரசாங்கத்தின் முன்னேற்ற வேலைகளை தாம் ஆதரிப்பதாயும், ஆனால் பிற்போக்கு வேலைகளை எதிர்க்கப்போவதாயும் கூறினர்.

பட்ஜட்டில் சோஷலிஸம் என்ற வார்த்தை உபயோகிக்கப்பட்டிருப்பதாயும், அந்த வார்த்தைக்கும் ஒரு முதலாளித்துவ அரசாங்கத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும் இது தேசிய அரசாங்கம் இல்லை என்றும், 1956-ம் ஆண்டுக்குப் பின்தான் நாட்டில் மாறுதல ஏற்பட்டதென்றும் சிறிமா தொடர்ந்து பேசுகையில் கூறினர்.

நிதிமந்திரி திரு. வன்னிநாயக்கா பேசுகையில், ஒவ்வொரு எதிர்க்கட்சியும் குருடர்கள் யானையைத் தடவிப்பார்த்தது போல் பட்ஜட்டை நல்ல முறையில் ஆராயாமல் இருக்கிறார்கள் என்றும், இது தவறானது என்றும் கூறினர். சரியான முறையில் புரிந்துகொண்டால் இது தகுதியான பட்ஜட் என்றும் கூறினர். வெளிநாட்டு உதவி கிடைத்தவுடன் நல்ல வேலைகள் நடைபெறம் என்றும் அவர் கூறினர்.

பிரதமர் டட்லி சேனநாயக்கா பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"எதிர்க்கட்சியினர் தங்கள் கொள்கைகளையும் திட்டங்களையும் எங்களை நிறைவேற்றும்படி கோருகின்றார்கள். ஆனால் இதனை நாங்கள் நிறைவேற்றமாட்டோம். பொருளாதாரத் துறையில் பண நெருக்கடி இருக்கத்தான் செய்கிறது. இதை மறைக்க முடியாது. எங்கள் உள்நாட்டு ஆஸ்தியும் கரைந்துவிட்டது. இந்த நிலையை முன்னாள் நிதிமந்திரியே உணர்ந்திருக்கின்றார். ஆனால் 'வங்குரோத்து' நிலைக்கு வந்துள்ள தனியார் துறையைப் பொறுத்தவரையில் இதனை நாங்கள் ஊக்குவிக்கவேண்டும், இதனையே நாங்கள் தற்பொழுது மேற்கொண்டுள்ளோம். வெளிநாட்டு உதவியைப் பெற்று இதன் மூலம் நாங்கள் இலங்கையை விற்றுவிட்டோம் என்று எதிர்க்கட்சியினர் கூறுகின்றனர். ஆனால் இந்தக் குற்றச்சாட்டில் ஒருவித உண்மையுமில்லை.

யாழ்ப்பாணத்திற்கு அண்மையில் விஜயம் செய்த சில இடதுசாரிக் கட்சியினர் விஷமப்பிரசாரம் செய்திருக்கிறார்கள். அவை முற்றும் பொய்யாகும். எதிர்க்கட்சியினர் புதிய கைத்தொழில்களை இந்த நாட்டில் ஸ்தாபித்துவிட்டோம் என்று புகழ்கின்றனர். ஆனால் எந்த அளவிற்கு இக்கைத்தொழில்கள் செயலாற்றுகின்றன என்பது தான் கேள்வி. புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கைத்தொழில்கள் இன்று இயங்க யந்திரங்கள் இன்றியும் உதிரிப் பாகங்கள் இன்றியும் இயங்கமுடியாத நிலையில் இருக்கின்றன. மொழிப் பிரச்னைபற்றி சில திரித்த கருத்தை எதிர்க்கட்சியினர் வெளியிட்டுள்ளார்கள். இது தவறு. வகுப்பு வாதத்தை உண்டாக்கி சமூகத்தில் ஒற்றுமையின்மையை உண்டாக்க சிலர் முனைந்துள்ளனர். இப்படிச்செய்தால் நாடு முன்னேற்றம் அடையமுடியாது. இவைகள் எல்லாவற்றையும் நீக்கி பழைய நாட்களை நான் எதிர்பார்க்கிறேன்.

திரு, பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

''வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் நிர்வாக மொழியாக்கப்படுவது உண்மையானல் தமிழரசுக்கட்சியின் நிபந்தனைகளுக்கு அரசாங்கம் இணங்கிவிட்டதென்றே நாம் கருதவேண்டும். எங்கள் ஆட்சிக் காலத்தில் தேசிய மயமாக்கப்பட்ட ஸ்தாபனங்களே இன்றைய வெற்றிக்குக்காரணம் இதனை மக்கள் நன்கு உணர்துள்ளார்கள் மறுபடியும் காலனி ஆட்சி இந்த நாட்டில் ஏப்படுவதை நாங்கள் விரும்பவில்லை, தமிழர்-சிங்களவர் பிரச்னை உண்மையானதுதான் நான் இதை மறுக்கவில்லை, ஆனால் இதனை நாங்கள் விரும்பியபடி தீர்வு காண்பதனல் மட்டுமே சிறந்த சூழ்நிலை ஏற்படும்''

வருகிற 31-ந் திகதி கமிட்டி நிலையில் பட்ஜட் விவாதம் ஆரம்பமாகும்.

## 3-வது பென்ஸ் கார்: முதல்பரிசு

### டிக்கெட் இலக்கம் 08 C 0259

குருநாகல், ஆகஸ்ட் 26

இன்று இழுக்கப்பட்ட 52-வது தேசிய சுவீப்பில் முதல் பரிசுக்கான டிக்கெட் இலக்கம் 08 C 0259 என அறிவிக்கப்பட்டது.

இரண்டாவது பரிசுக்கான டிக்கெட் இலக்கம் 71 S 0333.

மூன்ருவது பரிசுக்கான டிக்கெட் இலக்கம் 90 V 0657.

இவைதவிர ஒவ்வொன்றும் ரூபா 2500 கொண்ட 100 பரிசுகளுக்கான டிக்கெட்டுகளும் இழுக்கப்பட்டன.

முதல் பரிசாக பென்ஸ்காரும், ரூபா 50,000மும் வழங்கப்படும். கார் வேண்டாத முதல் பரிசுக்காரருக்கு, ரூபா 1 லட்சம் வழங்கப்படும்,

மூன்ருவது பென்ஸ் காருக்கான டிக்கெட்டுகள் ரூபா 24 லட்சத்துக்கு மேல் விற்பனை செய்யப்பட்டிருக்கின்றன.

இன்று பிற்பகல் நிதிமந்திரி திரு. யு. பி. வன்னிநாயகா சீட்டிழுப்பை நடத்திவைத்தார்.

## சிங்கப்பூர் பிரதமரை கொல்ல சதி

சிங்கப்பூர், ஆக. 26

சிங்கப்பூர் பிரதமர் லீகுவான்யூவையும், இதர மந்திரிகளையும் கொலை செய்யச் சதி செய்ததாய் 21 பேரை சிங்கப்பூர் பொலிசார் இன்று கைது செய்தனர். பகிரங்க இடங்களில் குண்டுகளை வீசி குழப்பத்தை உண்டு பண்ண இவர்கள் [illegible] இந்தோனேஷியாவில் பயிற்சி பெற்றவர் என்றும் அறிவிக்கப்பட்டது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் [illegible]-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28- திகதி அச்[illegible] வெளியிடப்பட்டுள்ளது

## மேலும் 3 பாகிஸ்தான் நிலைகள் பிடிக்கப்பட்டன

### எல்லைக்கோட்டுக்கப்பால் சம்பவம்

ஸ்ரீநகர், ஆக. 26

காஷ்மீர் டிட்வால் பகுதியில் எல்லைக் கோட்டுக்கப்பால் மேலும் 3 பாகிஸ்தான் நிலைகளை இந்தியத் துருப்புக்கள் கைப்பற்றியிருக்கின்றன. இரண்டு குன்றுகளின்மீது இவை மூன்றும் இருக்கின்றன.

முதல் குன்றில் நடைபெற்ற சண்டையில் 8 பாகிஸ்தானியர் கொல்லப்பட்டனர். ஏராளமான ஆயுதங்கள் பிடிபட்டன. மற்ருேர் குன்றின்மீது நடைபெற்ற சண்டையில் 3 பாகிஸ்தானியரும், 1 பட்டாணியரும் கொல்லப்பட்டனர்.

போர் நிறுத்தக் கோட்டுக்கப்பாலுள்ளஇந்தநிலைகளைப் பிடிக்கவேண்டிய காரணங்கள் விளக்கப்பட்டிருக்கின்றன. பாகிஸ்தானிகள் இப்பாதை வழியே ஊடுருவ முயன்றது தெரிய வந்தது. ஊடுருவலைக் கண்காணிக்கவும், அதைத் தடுக்கவுமே இவை பிடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

தேடும் முயற்சிகள் தீவிரமடைந்திருப்பதால், ஊடுருவல்காரர்கள் தலைமறைவாய் இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

நேற்று டிட்வால் பகுதியில் பாகிஸ்தானியர் 25 ருத்தல் பீரங்கிக் குண்டுகளை உபயோகித்துத் தாக்கினர்கள்.

ஜனதிபதி ராதாகிருஷ்ணன் இன்று ஸ்ரீநகருக்குச் சென்று நிலைமையை ஆராய்ந்தார். அவருடன் பாதுகாப்பு மந்திரி சாவனும் சென்றிருந்தார்.

ஓரிடத்தில் இந்தியப்படைகள் திடீரெனத் தாக்கியதால் ஒரு ஊடுருவல் காரர் மாண்டார் என்றும், 200 பேர் அஸாத் கஷ்மீருக்குள் தப்பி ஓடிவிட்டனர் என்றும் அறிவிக்கப்படுகிறது.

நிலைமை மிகவும் தீவிரமாய் இருப்பதாயும், கவலையீனமாய் இருக்கக்கூடாது என்றும் பிரதமர் சாஸ்திரி கூறியிருக்கிறார்.

## நாவற்குழி கொலைவழக்கில் எதிரிக்[illegible] 7 வருட கடூழிய சிறை

யாழ்ப்பாணம், வெள்ளி

நாவற்குழி கொலை வழக்கில் நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா எதிரிக்கு 7 வருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்தார்.

கடந்த 3 தினங்களாக நடந்த இந்த வழக்கின் தீர்ப்பு நேற்றுவழங்கப்பட்டது.

இந்த வழக்கில் 1964-ம் ஆண்டு டிசம்பர் 28-ம் திகதி நாவற்குழியில் நாகநாதர் பொன்னையா என்பவரை, விஞசி பொன்னையா பொல்லால் அடித்துக் கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

படுகாயம் விளைவித்த குற்றச்சாட்டில் எதிரி குற்றவாளியென ஜூரிகளில் 5-2 ஆகத் தீர்ப்பளித்தனர். அரைமணிநேர மந்திர ஆலோசனையின்பின் மரணம் விளைவிக்கக்கூடிய பொல்லினல் வேண்டுமென்று எதிரி படுகாயம் விளைவித்ததாக ஜூரிகள் தெரிவித்தனர். ஜூரிசபையின் பெரும்பான்மையான முடிவைத்தாம் ஏற்றுக்கொள்வதாக நீதியரசர் தீர்ப்பின் போது தெரிவித்தார்.

## பிர்லா ரூ. 1 லட்சம் நன்கொடை

புதுடில்லி, ஆக. 26

கன்னியாகுமாரி பாறை நிறுவப்படவிருக்கும் விவேகானந்தர் நினைவுச் சின்னத்திற்கு, பிர்லா குடும்பத்தினர் 1 லட்சம் ரூபாய் நன்கொடையளித்திருக்கிர்கள்.

## டெஸ்ட் கிரிக்கெட்

லண்டன், ஆகஸ்ட் 26

இங்கிலாந்துக்கும் தென்னபிரிக்காவுக்குமிடையே இங்கு நடைபெற்ற 3-வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் தென்னபிரிக்கா 5 விக்கெட் நஷ்டத்திற்கு 128 ரன்கள் எடுத்தது.

## செனட் ஒத்திவைப்பு

கொழும்பு, வியாழன்

செனட்சபை வருகிற செப்டம்பர் மாதம் 20-ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## சனசமூக நிலையக் கூட்டம்

கிளிநொச்சி, வெள்ளி

கரடிப்போக்கு சனசமூக நிலையத்தின் பொதுக்கூட்டம் தலைவர் நா. செல்வராசா தலைமையில் கூடிற்று. பின்வருவோர் நடப்புவருட உத்தியோகத்தர்களாக தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு சி. எம். சின்னத்துரை, உபதலைவர் வீ. ஆனந்தசங்கரி, காரியதரிசி சே, வரதராசா, உபகாரியதரிசி: க. மகாலிங்கம் தனதிகாரி, பே, ம, தோமஸ்,

## மாத்தளை மகாநாடு . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வெள்ளம் போல் திரண்டிருந்தனர். இ. தொ. கா. தொண்டர்களும் பிரமுகர்களும் பலருக்கும் இடவசதிகளைச் செய்துகொடுக்கும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

மகாநாட்டை முன்னிட்டு இ. போ. ச. ஞாயிறுவரை விசேஷ பஸ்களை சேவைக்கு விட்டுள்ளது.


## ஏலவிற்பனைக்கு

தட்டெழுத்து யந்திரம் (ஆங்கிலம்) ஒன்று பகிரங்க ஏலத்தின் மூலம் அச்சுவேலி கி.ச. கந்தோரில் 4-9.65-ந் திகதி காலை 10-00 மணிக்கு விற்கப்படும். கந்தோர் நேரத்தில் அதனைப்பார்வையிடலாம்.

க. சுந்தரமூர்த்தி.
தலைவர்,
கிராமசபை,
அச்சுவேலி. 820

## திருமண அழைப்பு

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7-23 மணிமுதல்9-13 மணிக்குள் பொன்னலைவரதராஜப் பெருமாள் கோவில்சுழிபுரம் க.முத்துச்சாமி ஐயர் அவர்களின் புத்திரி சௌபாக்கியவதி சுசிலாவுக்கும்கோப்பாய் கா. நீலகண்டக்குருக்கள் அவர்களின்புத்திரன் சோமாஸ்கந்த சர்மா அவர்களுக்கும் திருமணம் நடைபெறும். உறவினர்களும் நண்பர்களும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர். 825


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org